# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 மே 16–31 தொகுதி 24 இதழ் 19

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200




## பாஜக அராஜகத்திற்கு எதிராக இடதுசாரிகள் பேரணி






நீட் தேர்வு 2026 வினாத்தாள் கசிவு

# தேசிய தேர்வு முகமை கலைக்கப்பட வேண்டும்!
# நீட் தேர்வுகள் ரத்து செய்யப்பட வேண்டும்!
# ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும்!

சமீபத்தில் ராஜஸ்தான் காவல்துறை நடத்திய விசாரணையில், நீட் தேர்வுக்கான “கெஸ் பேப்பர்” ஒன்று தேர்வுக்கு முன்பே பரவி வந்தது தெரியவந்துள்ளது. அந்த வினாத்தாளில் 600-க்கும் மேற்பட்ட மதிப்பெண்களுக்கு உரிய விடைகள் கசிந்ததாகக் கூறப்படுகிறது. இதற்கு பொறுப்பேற்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, தேசிய தேர்வு முகமை மீண்டும் தேர்வை நடத்தத் தீர்மானித்துள்ளது!

கடந்த 10 ஆண்டுகளில் 89 வினாத்தாள் கசிவு சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. JEE Mains 2021, NEET UG 2024, UGC NET 2024 போன்ற பெரிய தேர்வுகளில் ஏற்பட்ட கசிவுகள் உட்பட பல சம்பவங்கள் நடந்துள்ளன. தேசிய இது மாணவர்களின் கல்வி மற்றும் உழைப்பை மதிக்காத அணுகுமுறையை வெளிப்படுத்தியுள்ளது.

நீட் யுஜி 2026 வினாத்தாள் கசிவு, தேசிய தேர்வு முகமை மற்றும் பாஜக அரசின் திறமையின்மை மற்றும் ஊழலின் இன்னொரு வெளிப்பாடாகும். லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் தனியார் பயிற்சி மைய மாஃபியாகளின் நலன்களுக்காக பலிகொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் போட்டித் தேர்வுகளில் வினாத்தாள் கசிவுகள் தொடர்ந்தாலும் கல்வி அமைச்சகம் உரிய நடவடிக்கை எடுக்காமல், ஊழல் நிறைந்த மற்றும் திறமையற்ற தேசிய தேர்வு முகமைக்கு பாதுகாப்பு அளித்து வருகிறது.

ஏற்கனவே மாணவர்களின் தற்கொலை விகிதம் அதிகரித்து வரும் இந்தியாவில் (2020 முதல் 2021 வரை 4.5% அதிகரிப்பு), இத்தகைய வினாத்தாள் கசிவுகள் மாணவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், பொறுப்பற்ற தனியார் அமைப்புகளின் கீழ் செயல்படும் மையப்படுத்தப்பட்ட தேர்வு முறையின் குறைபாடுகளையும் இது காட்டுகிறது. 22.79 லட்சம் நீட் 2026 தேர்வர்கள், இந்த வினாத்தாள் கசி ஊழலால் ஏமாற்றமடைந்துள்ளனர். மாணவர்களின் எதிர்காலம் ஏலத்திற்கு விடப்படும் பொருள் அல்ல!

அனைத்து தேர்வுகளும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் கொண்ட அரசு அமைப்புகளின் கீழ் நடத்தப்பட வேண்டும்

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், இதற்கு நேரடியாக பொறுப்பேற்று பதவி விலக வேண்டும்!

மேலும், தனியார் பயிற்சி மைய மாஃபியா வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டு, பொதுக் கல்வியை திட்டமிட்டு சீர்குலைக்கும் இந்த செயல்களுக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.!

தேசிய தேர்வு முகமையை கலைக்க வேண்டும்!

நீட் தேர்வு முறைகள் ரத்து செய்யப்பட வேண்டும்!

**அகில இந்திய மாணவர் கழகம் (AISA)**

## திருமங்கலம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர் போராட்டம் வெல்லும்




தமிழ்நாட்டில் ஹோமியோபதி முதுநிலை மருத்துவப் படிப்புக்கான கல்லூரியைத் தொடங்க வேண்டும், ஆரம்ப சுகாதார நிலையம் முதல் மாவட்ட மருத்துவமனை வரை ஹோமியோபதி சிறப்புப் பிரிவினை உருவாக்கி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து, மதுரை திருமங்கலத்தில் உள்ள தமிழ்நாடு அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தில் இருக்கும் மாணவர்களை அகில இந்திய மாணவர் கழகத்தின் மாநிலக் குழு உறுப்பினர் தோழர் தேவராஜ் நேரில் சந்தித்து ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் தெரிவித்தார். மாணவர்களின் கோரிக்கையை தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் குழுவின் அரசியல் ஏடு**

**இருவார இதழ்**
*2026 மே 16-31*
*தொகுதி 24 இதழ் 19*

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


# மக்கள் எதிர்பார்த்த மாற்றம் தருமா தவெக ?

ரீல்ஸ் போட்டு ஓட்டுகள் வாங்கிவிட்டார்கள் என்று சொன்னாலும்கூட வாக்களித்த மக்கள் என்னவோ ரியல் (உண்மையான) மாற்றம் வரவேண்டும் என்றும் எதிர்பார்த்துதான் வாக்களித்துள்ளார்கள். மாற்றம், கோட் சூட்டில் இருந்து துவங்கிவிட்டது. என் தாயை, தமிழை, தமிழர் அடையாளமான வேட்டி, சட்டையை மற்றவர்களுக்காகவெல்லாம் நான் மாற்ற முடியாது என்று ரீலில் (திரைப்படத்தில்) சொன்ன திரு.விஜய், ரியலில் தமிழ்நாட்டின் முதல்வராகவே பதவியேற்கும் போது (தமிழ்) தாயை மறந்து கோட் சூட்டில் பதவியேற்றார். திரு. விஜய் வேட்டி, சட்டை அணியாதவரே அல்ல. இது ஏதோ உடை தொடர்பானது, உணர்வு தொடர்பானது மட்டுமல்ல. இதற்குப் பின்னால் ஒரு அடையாள அரசியல் இருக்கிறது. கார்ப்பரேட் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் (சிஇஓ) உடுத்தும் உடை அது. அடுத்து, அனைத்து தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகளிலும் ஆரம்பத்தில் பாடப்பட்டு வந்த தமிழ்தாய் வாழ்த்து திரு. விஜய் முதல்வராகப் பதவியேற்கும் போது மூன்றாம் இடத்திற்குப் போய்விட்டது. சிறுப்பான்மையினரை, குறிப்பாக இஸ்லாமியரை ஒழித்துக்கட்டச் சொல்லும் வந்தேமாதரம் பாடல் (ஒன்றிய அரசு வழிகாட்டுதல் படி) முதலிடம் பிடித்தது. ஆனால், அந்தப் பாடல் உருவான மேற்கு வங்கத்தில் பாஜக அரசு முதன்முதலாகப் பதவியேற்கும் நிகழ்ச்சியில் ‘வந்தே மாதரம்’ பாடப்படவேயில்லை. திரு. விஜய் பதவியேற்ற அன்றே, சைபர் கிரைம் போலீசால், விஜய் அரசைப் பற்றி விமர்சித்து பேசியதாக சில வலைத் தள முகவரிகள் முடக்கப்பட்டு தடை செய்யப்பட்டன. வலைத் தளத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற்று ஆட்சியமைத்தபின்னர், அந்த வலைத் தளங்களை தமக்கு எதிராகப் பயன்படுத்திடக் கூடாது என்கிற அச்சமா?. ஆனால், சென்னை உயர்நீதிமன்றம் சைபர் கிரைமின் இந்த உத்தரவிற்கு தடை விதித்துவிட்டது. மாணவர்களை அரசியல்படுத்தி ஆட்சியைப் பிடித்த திமுக, பின்னர் கல்லூரிகளில் மாணவர் பேரவைத் தேர்தலைக் கூட நடத்துவதற்கு முயற்சி எடுக்கவில்லை. அதுபோல தவெகவும் அத் தடத்தைப் பின்பற்றுகிறதோ?! பெரியார் நினைவிடம் சென்று காலில் செருப்பின்றி, கைகூப்பி வணங்கிவிட்டு வந்த, அதே வேகத்தில், பகுத்தறிவுக்கு முரணாக, தன்னுடைய ஆஸ்தான ஜோசியரை, தனக்கான அரசியல் ஆலோசகராக அரசுப் பணியில் நியமித்தார் விஜய். இதற்கு கடும் எதிர்ப்புகள் வந்தவுடன் மறுநாளே அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றார். சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின், சமூக நீதிக்கும் சாதியாதிக்கத்திற்கும் அடிப்படையான சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னதற்கு, திமுக சனாதனத்தை எதிர்த்ததால்தான் தோல்வியுற்றது என்று (சனாதனத்தை உயர்த்திப் பிடித்த பாஜக 27 தொகுதிகளில் 1ல் தான் வெற்றி பெற்றோம் என்பதை வசதியாக மறந்து(மறைத்து)விட்டு கூச்சல் போட்டவுடன், நாங்கள் இந்துக்கள் உட்பட எல்லா மதத்தினருக்குமானவர்கள் என்று சொல்லும் தவெக தலைவர்கள், இந்து சமய நடைமுறைக்கும் சனாதனத்திற்கும் சம்மந்தம் கிடையாது என்று ஓங்கிச் சொல்லத் தயங்குவது ஏனோ? இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும்போது, மத்திய அரசுக்கு மானே, தேனே என்று கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார் ஸ்டாலின் என்று சொன்ன விஜய், அடுத்து நம்ம ஆட்சிதான், களத்தில் இறங்குவோம் என்று சொன்ன விஜய், இப்போது 40 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், களத்தில் இறங்காமல் இவரும் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். ஒரு விவசாயியை அழைத்து தனது தேர்தல் அறிக்கையைத் தந்த விஜய், இப்போது பருத்தி விவசாயின் வயிற்றில் அடித்து, நூற்பாலை முதலாளிகள் லாபம் ஈட்ட வெளிநாட்டு பருத்திக்கான

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

# மாறிவரும் தமிழ்நாட்டு அரசியல் சூழல் – நமது பார்வை

**[சிபிஐ (எம்–எல்) விடுதலை – தமிழ்நாடு மாநில நிலைக்குழுவின் அரசியல் தீர்மானம்]**
10.5.2026

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் 2026-ன் முடிவுகள் பிஜேபியையும் அதன் கூட்டணியையும் திட்டவட்டமாக நிராகரித்து உள்ளது என்பது ஒரு அழுத்தமான செய்தி. அதை மறந்துவிட்டு மற்ற விசயங்களைப் பேச முடியாது. 2021 தேர்தலில் பிஜேபி நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது. 2026 தேர்தலில் 27 தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதிதான் அதற்கு கிடைத்துள்ளது. வாக்களித்தோர் எண்ணிக்கை சதவீதம் அதிகமான இத்தேர்தலில், பிஜேபியின் வாக்கு சதவீதம், கேரளம் போலல்லாமல், தமிழ்நாட்டில் சற்று குறைந்துள்ளது. வட தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க அளவு அதிமுக வெற்றி பெற்றதற்கு பாமகவின் வாக்கு வங்கியால் அதிமுகவுக்கு கிடைத்த வாக்குகள் ஒரு முக்கிய காரணமாகும். மாறாக, அதிமுகவின் வலுவான கோட்டையாக கருதப்பட்ட மேற்கு தமிழ்நாட்டில் (கொங்கு மண்டலத்தில்) அதிமுக உடைந்து விட்டிருப்பதைக் காணமுடிகிறது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற, முற்போக்கு கூட்டணி 70 இடங்கள் மட்டுமே பெற்று பெருந்தோல்வியுற்று இருக்கிறது. அதேவேளை வெற்றி பெற்ற தவெகவிட திமுகவின் வாக்கு சதவீதம் 3.5 சதவீதம்தான் குறைவாக இருக்கிறது. திமுகவின் 5 ஆண்டுகால ஆட்சிக்கு எதிரான வாக்குகள் அதிமுகவுக்கு மாறுவதற்குப் பதிலாக தவெகவுக்கு சென்றிருக்கிறது என்பது உண்மைதான். சுமார் 14 சதவீத திமுக கூட்டணியின் வாக்குகள் தவெகவுக்கு சென்றுள்ளன. அதேபோல, சுமார் 15 சதவீத அதிமுக வாக்குகளும், இதர கட்சிகளின் வாக்குகளும், குறிப்பாக நாம் தமிழர் கட்சியின் 4 சதவீத வாக்குகளும் தவெகவுக்கு சென்றதனால், தவெக 35 சதவீத வாக்குகளைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக, அதே நேரத்தில் பெரும்பான்மை இல்லாத கட்சியாகவே வெற்றி பெற்றுள்ளது.

தேர்தல் என்பது வெறும் வாக்கு சதவீதங்கள், எண் கணிதம் மட்டுமே தொடர்புடையது அல்ல. அது மக்கள் மனங்கள், வாழ்நிலை யதார்த்தங்கள், எதிர்பார்ப்புகள், தேடுதல்கள், விருப்பங்கள், உணர்வுகள் தொடர்புடையது. அப்படிப் பார்க்கும்போது, திமுக ஆட்சியில் பொருளாதாரம் வளர்ந்தது. கார்ப்பரேட் முதலாளிகளின் பொருளாதாரம் வளர்ந்தது. கார்ப்பரேட் முதலாளிகள் வளர்ந்தார்கள். அதோடு கூடவே, வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்தது. கல்வி எட்டாக்கனியாவது அதிகரித்தது. வருமான ஏற்றத்தாழ்வு அதிகரித்தது. தலித் மக்கள் மீதான தாக்குதல்கள், சாதியாதிக்க, ஆணவக் கொலைகள் முன்னெப்போதும் விட அதிகரித்தன. தூய்மைப் பணியாளர்கள், சத்துணவுத் தொழிலாளர்கள், அங்கன்வாடித் தொழிலாளர்கள் முதல் பகுதிநேர ஆசிரியர்கள், மாற்றுத் திறனாளிகள் வரை தமது பணி நிரந்தரத்திற்காகவும் ஊதிய உயர்விற்காகவும் நடத்திய போராட்டங்கள் எண்ணற்றவை. காவல்துறையின் அடக்குமுறையையும் எதிர்கொண்டார்கள். பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்பக் கொண்டு வருவதாக அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. உயர்மட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்குள் அரசு நிர்வாகம் என்பது அனைவரும் பேசும் பொருளாகி இருந்தது. அது முன்னெப்போதையும்விட, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் திமுக எதிர்ப்பு மனநிலைலையை உருவாக்கி விட்டிருந்தது. தொழிலாளர் விரோத தொகுப்புச் சட்டங்களுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றத் தயாராக இல்லை. மக்கள் மத்தியில் நிலவியதோர் ஆட்சி மாற்றத்திற்கான தேடுதலும், ஏற்கனவே திமுக ஆட்சிக்கு எதிராக கனன்று கொண்டிருந்த அதிருப்திகளும் திமுக ஆட்சி செய்யத் தவறியவையும் சேர்ந்து திமுக கூட்டணி தோல்வியடைய காரணமாகி விட்டது. ஏழைகள் அழுத கண்ணீர் அரியணையை அரித்தது. எளிய உழைக்கும் மக்களின், குறிப்பாக தூய்மைப் பணியாளர் உள்ளிட்ட பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் அத்தகைய முடிவின் துவக்கமாய் அமைந்தன.

விஜய்யின் வளர்ச்சி, தவெகவின் வளர்ச்சி, தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் முடிவு என குருமூர்த்தி உள்ளிட்ட வலதுசாரி வட்டாரங்கள் பெருமிதம் கொண்டுள்ளனர். விஜய்யின், தவெகவின் தேர்தல் வெற்றியை அப்படி கருத முடியாது. ஏனென்றால், திமுக – அதிமுக உள்ளிட்ட கட்சிகள் பெற்றுள்ள வாக்குகளும் சரி, விஜய் தனது கொள்கைத் தலைவர்களாக பெரியார், அம்பேத்கரை உயர்த்திப் பிடித்ததும் சரி, தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார

நிலைமைகளும் சரி அதை சுட்டிக்காட்டவில்லை. இன்னும் வேறுசிலர் இது ஒரு திராவிட கட்சிகள் அல்லாத, திராவிடத்துக்குப் பிந்தைய அரசியலின் கட்டம் தமிழ்நாட்டில் துவங்கி இருக்கிறது என்கிறார்கள். "திராவிடத்துக்குப் பிந்தைய" என்பது "திராவிடத்துக்கு எதிரான" என்று பொருளாகாது என்கிறார்கள். தவெகவின் வளர்ச்சியை திராவிடத்திற்குப் பிந்தைய அரசியலின் துவக்கம் என்பது, அத்தகைய அரசியலின் பல்வேறு பரிமாணங்கள் என்ன, எப்படி இருக்கும் என்பது விவாதத்திற்கு உட்பட்டது. "திராவிட" என்கிற பெயர் தாங்கியுள்ள கட்சிகளின் வாக்கு சதவீதமும் விஜய்யின் முழுமை பெறாத வெற்றியும் அத்தகைய ஒரு திராவிட அரசியலுக்குப் பிந்தைய கட்டம் துவங்கி இருப்பதாகக் காட்டவில்லை. அதுவும், இது திராவிட இயக்கத்தின் முடிவு என வலதுசாரிகள் கொக்கரித்துக் கொண்டிருக்கும் பின்னணியில், நாம் அதுகுறித்து இன்னும் கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. திராவிட இயக்கத்தோடு அம்பேத்கரிய இயக்கமும் கம்யூனிஸ்டுகளின் செங்கொடி இயக்கமும் சுயமரியாதை, சமூக நீதி மற்றும் சமத்துவ பாரம்பரியத்தில் தமது வேர்களைக் கொண்டுள்ளன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

சுமார் 60 ஆண்டுகளாக திராவிட கட்சிகளுக்கு மாறிமாறி வாக்களித்து மக்கள் களைத்துப் போயிருக்கிறார்கள். ஒரு மாற்றத்திற்கான வேட்கை நீண்டகாலமாக நிலவி வருகிறது என்பது உண்மை. அத்தகையதோர் மாற்றத்திற்கான வேட்கையை, தேடுதலை கைவசப்படுத்தி எழுந்திட பல கட்சிகளும் பல கட்டங்களில் பல விதங்களில் முயற்சித்து வருகின்றன. விஜயகாந்த் முயற்சி செய்தார். கமலஹாசன் முயற்சி செய்தார். சீமான் இன்னமும் முயற்சித்து வருகிறார். இவர்கள் அனைவரையும் விட பிஜேபி மாபெரும் முயற்சி செய்து வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன.

மாற்றத்திற்கான தேடுதல் என்பது அரசியல் மாற்றம் அல்ல, ஒரு ஆட்சி மாற்றம், ஆள்வோர் மாற்றம் என்ற அளவில் மட்டுமே இருக்கிறது. அதை இடதுசாரி பாதை அல்லது வலதுசாரி பாதையிலானதோர் அடிப்படை மாற்றத்திற்கான தேடுதலாக புரிந்து கொள்ள கூடாது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னணியில், பொருளாதார வளர்ச்சி அதிகரித்தபோதும், அதற்கு அக்கம்பக்கமாகவே வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துவருகிறது. மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த யாராவது வரமாட்டார்களா, ஏதாவது செய்ய மாட்டார்களா என்கிற தேடுதல் இருக்கிறது. அத்தகைய தேடுதலின் பின்னணியில்தான், விஜய்யின் வருகை, தவெகவின் வருகை மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது. இளைஞர்கள், பெண்கள் பெருமளவு வாக்களித்து இருக்கிறார்கள். 40 வயதுக்கு கீழ் உள்ளவர்களில் 70 சதவீதமும், 40 வயதுக்கு மேல் உள்ளவர்களில் 30 சதவீதமும் வாக்களித்து இருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக, மாநிலம் முழுவதுமுள்ள, சென்னை உள்ளிட்ட, பெரும்பாலான நகரப் பகுதிகளிலும், சென்னையின் சுற்றுப்புற மாவட்டங்களிலும், தென் மாவட்டங்கள் சிலவற்றிலும் தவெக பெரும் வெற்றி பெற்றுள்ளது. தவெகவின் வெற்றி நடுத்தர மக்கள் வாக்களித்து பெற்ற வெற்றி மட்டுமல்ல, தலித் மற்றும் ஏழை மக்களும் பெருமளவு வாக்களித்து இருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் முதல் அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள் வரை வாக்களித்து இருக்கிறார்கள்.

அதை தற்குறிகளின் வெற்றி என்றோ, அரசியலற்றோரின்வெற்றி என்றோ ஏளனம்செய்வது தவறு. அதனை நவதாராள வாத கொள்கைகள் மூர்க்கத்தனமாக அமுல்ப டுத்தப்பட்டு வரும் பின்னணியில், சமூக ஊடக உலகம் என ஒன்று உருவாகியிருக்கும் பின்னணியில், மாறிவரும் தேவைகள், மாறிவரும் கலாச்சார விழுமியங்கள், வேட்கைகள், தேடுதல்கள், எதிர்பார்ப்புகள் இட ஒதுக்கீடு தாண்டி மறுவரையறை செய்யப்பட வேண்டிய சமூக நீதி, பெண் தொழிலாளர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் பின்னணியில் எழும் பாதுகாப்பு கோரிக்கைகள், இயல்பாகிவிட்ட, வழக்கமாகிவிட்ட ஊழலுக்கு எதிரான கோரிக்கைகள் எனும் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும். வழமையான, பழமையான அரசியல் விழுமியங்களிலிருந்து புதிய அரசியல் விழுமியங்களுக்கான தேடுதலாகவும் அதை காண வேண்டும். அத்தகைய வேட்கையின் ஒரு பகுதிதான் ஊழலுக்கு எதிரான, போதைப் பொருட்களுக்கு எதிரான கோரிக்கைகளாக உருப்பெற்றிருக்கின்றன. தனியார்மயமாக்கத்தின் மற்றொரு விளைவான மின் கட்டண உயர்வுக்கு எதிரானதாக வடிவம் பெற்றிருக்கிறது. அதனால்தான் தான் ஆட்சியேற்ற உடனேயே முதலில் 200 யூனிட் இலவச மின்சாரம், சிங்கப் பெண் படை, போதைப் பொருட்கள் தடுப்புப்படை என்பவற்றிற்காக கையெழுத்துப் போட்டிருக்கிறார் புதிய முதல்வர் விஜய்.

இவை அனைத்திற்கும் விஜய் சரியான பதிலா என்பது மற்றொரு முக்கியமான, புறந்தள்ளப்பட முடியாததோர் கேள்வி. சரியான பதிலா இல்லையா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இன்றைய நாளில், திமுகவின் இடத்தை விஜய் கைப்பற்ற நினைக்கிறார். தான் மற்றுமொரு திராவிட கட்சிதான் என நிறுவப்பார்க்கிறார். பதவியேற்ற பின்னர் பெரியார் திடல் சென்று பெரியாருக்கு மரியாதை செய்ததும் அதைத்தான் பூடகமாக விவரிக்கிறது.

தமிழ்நாட்டின் முற்போக்கு விழுமியங்களை, முற்போக்கு பாரம்பரியத்தை தகர்த்து அதனிடத்தில் வலதுசாரி அரசியலை வளர்ப்பதற்கானதோர் களத்தை உருவாக்குவதுதான் பிஜேபியின் தலையாய

நோக்கம், அரசியல் தந்திரம். விஜய்-தவெக, திமுக-அதிமுக உட்பட தமிழ்நாட்டில் செல்வாக்கு பெற்ற அரசியல் சக்திகள் அனைவரையும் தனது பாசிச நோக்கத்தை நிறைவேற்ற பயன்படுத்தும் பிஜேபியின் முயற்சி ஒருபோதும் ஓயாது. தேர்தலுக்குப் பிறகு ஆட்சியமைப்பதில் ஆளுநரின் செயல்பாடு அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. விஜய் ஆட்சியமைப்பதை தடுப்பதற்காக அதிமுக ஆட்சியை திமுக ஆதரிக்கலாம் என எழுந்த வதந்திகளும் அதைத்தான் சுட்டுகின்றன. விஜய்யின் அரசியல், தவெகவின் அரசியல் எந்தத் திசையில் பயணிக்கும் என்பதை இப்போதே முடிந்த முடிவாக சொல்லிவிட முடியாது.

தவெகவின் அரசியல் இன்னும் முழுமையானதொரு வடிவம் பெறவேண்டி இருக்கிறது. தவெகவின் வாக்குறுதிகளை பார்க்கும் போது நலத் திட்டங்களை தொடர்வதில், அதிகப்படுத்துவதில் போட்டி போடுவது தெரிகிறது. ஆனால், விஜய்யின் 'கஜானா காலி' எனும் வாதம், 'வெள்ளை அறிக்கை' வெளியீடு, 'கால அவகாச' கோரிக்கை ஆகியவற்றைப் பார்க்கும் போது பல்வேறு கேள்விகள் எழுகின்றன. ஒரு உண்மையான மதச்சார்பற்ற சமூக நீதி ஆட்சி இப்போது துவங்குகிறது என்றார் முதல்வர் விஜய். ஆனால், அவர், பிஜேபி எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு சக்தியாக எழுவாரா, அல்லது அதற்கு எதிர்த்திசையிலோ வேறு திசையிலோ பயணிப்பாரா என்பதை, தவெக ஒரு பாசிச எதிர்ப்பு, பிஜேபி எதிர்ப்பு கட்சியா அல்லது ஒரு பிஜேபி அல்லாத கட்சியா என்பதை, தமிழர், தமிழ்ப் பெருமிதம் பற்றி, கூட்டாட்சி தத்துவம் பற்றி பேசும் தவெக, அதற்காக ஒன்றிய அரசுக்கு எதிராக சமரசமற்ற விதத்தில் போராடுமா அல்லது வேறு பாதையை தேர்ந்தெடுக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். பொருளாதார வளர்ச்சியை, தொழில்துறை வளர்ச்சியை அதிகரித்திட தவெக முயற்சிக்கும். ஆனால், தொழிலாளர் உரிமைகள், நலன்கள் குறித்து என்ன அணுகுமுறை மேற்கொள்ளும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஒட்டு மொத்தத்தில், தவெக ஒரு மாறிச் செல்லும் கட்டத்தில் இருக்கும் ஒரு கட்சி என்று நாம் சொல்லலாம்.

எது எப்படியானாலும், விஜய்யின் தவெக இன்று ஆளும் கட்சி. ஆளும் கட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டுவது, அதற்கு எதிராகப் போராடுவது எதிர்க்கட்சிகளின் கடமை. நமது கடமையும் கூட. அதுதான் ஜனநாயகம். திமுக ஆட்சியிலிருந்தபோதும் கூட, இந்தியா கூட்டணியில் அங்கம் வகித்த போதும் கூட, நாம் அதைத்தான் செய்தோம்.

மாறிய அரசியல் சூழலில், தமிழ்நாட்டு அரசியல் வியூகங்களில் ஏற்படும் மாற்றங்களையும் நாம் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். சூழலுக்குப் பொருத்தமான அரசியல் முடிவுகளை நாம் மேற்கொள்வோம். அது ஆட்சியாளர்களின் மக்கள் விரோத செயல்பாட்டை எதிர்க்கும் நமது அடிப்படைக் கடமையோடு, பிஜேபியின் இந்துத்துவ மதவெறி, கார்ப்பரேட் லாபவெறி, ஆதிக்க சாதிவெறி கொண்ட பாசிசத்தை, அதன் முதன்மை பிரதிநிதியான பிஜேபியை எதிர்க்கும் நமது அடிப்படைக் கடமையோடு பொருந்தியதாக இருக்கும்.

மதவெறி வெறுப்பு அரசியலுக்கு எதிராக, உழைக்கும் மக்களின் உரிமைகளை மறுக்கும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு எதிராக, சாதி ஆதிக்கத்துக்கு எதிராக, மாநில உரிமைகளுக்காக, உண்மையான கூட்டாட்சிக்காக, சமூக நீதி, சமத்துவத்துக்காக தவெக ஆட்சி குரல் கொடுக்க வேண்டும். அப்படி குரல் கொடுக்கவில்லையென்றால், தவெக ஆட்சிக்கு எதிரான முதல் குரல் சிபிஐஎம்எல் விடுதலையின் குரலாக இருக்கும் அதேவேளை, இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகளோடு இணைந்து போராடும். ❑

**(தலையங்கம் தொடர்ச்சி...)**

இறக்குமதி வரி 11 சதவீதத்தை குறைக்கச் சொல்லி மோடிக்கு கடிதம் எழுதுகிறார். விஜய் கட்சி ஆரம்பித்தவுடன் பரந்தூருக்கு முதல் பயணம் சென்றார். அந்த விவசாயிகளுடன், அந்த மக்களுடன் நான் நிற்பேன் என்றார். இப்போது, பரந்தூர் விமான நிலைய பிரச்சனை பற்றி பேசிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார். பதவியேற்று ஏழு நாள்களுக்குப் பின்புதான் அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. திரு. கே.ஏ.செங்கோட்டயன் தவிர, விஜய் உட்பட அனைவரும் அரசாங்க நிர்வாக நடைமுறைக்குப் புதியவர்கள். நிதி நிலை பற்றி வெள்ளையறிக்கை வெளியிடுவேன், கஜானா காலி, 10 லட்சம் கோடி கடன் என்று பதவியேற்கும் போதே பேசிவிட்டார் விஜய். 717 டாஸ்மாக் கடைகளை மூடச் சொல்லிவிட்டது தவெக அரசு. மக்கள் நலன் காக்க அனைத்து டாஸ்மாக் மதுக் கடைகளையும் மூடு! பணக்காரர்களுக்கான மன மகிழ் மன்றங்களையும் மூடு! 23 ஆண்டுகளாகப் பணிபுரியும் 23,000 டாஸ்மாக் பணியார்களை தவெக தேர்தல் வாக்குறுதிப்படி பிற அரசு துறைகளில் நிரந்தரப் பணியில் அமர்த்து என்று தவெக அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள் டாஸ்மாக் பணியாளர்கள். மதுரை திருமங்கலத்தில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தொடர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போதுதானே வந்திருக்கிறோம் கால அவகாசம் வேண்டும் என்று சொல்லிவிட்டு, நாங்கள் உடனே அதைச் செய்துள்ளோம், இதைச் செய்துவிட்டோம் என்று விளம்பர அரசு நடத்தாமல், அக்கறையோடு, வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புகளை, தேவைகளை நிறைவேற்ற தவெக அரசு முன் வருமா? மக்கள் எதிர்பார்த்த மாற்றம் வருமா? பொறுத்திருந்து பார்ப்போம்.❑

# தவெக தேர்தல் அறிக்கை என்ன சொல்கிறது?

முதல் தேர்தல். முதல் வெற்றி. ஆட்சியைப் பிடித்து விட்டது தவெக. அதன் தலைவர் விஜய் முதலமைச்சராகி விட்டார்! ஆனாலும் வேடிக்கை என்னவென்றால், அவரது ‘அரசியல் எதிரி’யான திமுக விலுள்ள கூட்டணிக் கட்சிகள்தான் தவெக ஆட்சியை தாங்கி நிற்கின்றன. தவெக வெற்றி, அகில இந்திய அளவில் ஆச்சரிய குரல்களை உருவாக்கியுள்ளது, எப்படி இத்தனை பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? தேடல்கள் தொடங்கியுள்ளன. இந்தத் தேடலை தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் அறிக்கை ஊடாக தொடங்குவோம்.

தேர்தலுக்கு, ஏழு நாள்களுக்கு முன்பு ஏப்ரல் 16 அன்று, தவெக தேர்தல் அறிக்கையை அதன் தலைவர் விஜய் வெளியிட்டார். அதை ஒரு விவசாயி, தொழிலாளி, நெசவாளி, மீனவர், திருநங்கை பெற்றுக் கொண்டனர். உண்மையிலேயே இது புதுமையான முயற்சி. ஆனால், பெண் தூய்மைப் பணியாளர் எவரும் பெற்றுக் கொண்டாரா தெரியவில்லை.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” எனும் திருக்குறள் சொற்களை முழக்கமாகக் கொண்டு, ‘மக்களின் தேர்தல் அறிக்கை 2026’ எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இது தேர்தல் அறிக்கை மட்டுமல்ல. தவெக பற்றி தெரிந்துகொள்ள முதல் முறையாக கிடைத்துள்ள எழுத்துபூர்வமான கொள்கை அறிக்கை. எனவே, தேர்தல் வாக்குறுதிகள் பற்றிய விமர்சன பகுப்பாய்வாகவும் அதன் கொள்கை, செயல்திட்டம், வழிமுறை குறித்த அரசியல் விமர்சனமாகவும் அணுகலாம்.

### திருக்குறளின் ஆட்சித் தத்துவம்?

தேர்தல் அறிக்கை ஒரு பின்னணிக் கதையுடன் நம்மை “மக்களின் தமிழ்நாட்டுக்கு” அழைக்கிறது. இந்த ‘முதல் தேர்தல் அறிக்கை’ “தமிழ் மண்ணின் ஆகப்பெரும் தத்துவப் பேராசான் திருவள்ளுவரால் எழுதப்பட்டு உலகிற்கே வழிகாட்டும் பொதுமறை” “திருக்குறள் அருளிய ஆட்சித் தத்துவத்தின்படி” தேர்தல் அறிக்கை வடிக்கப்பட்டுள்ளதாக தவெக கூறுகிறது. “அறம், பொருள், இன்பம்” எனும் முப்பெரும் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு “இந்தத் தேர்தல் அறிக்கையை பத்து தூண்களாக பிரித்து, வாக்குறுதிகள் கட்டமைக்கப்பட்டுள்ளதாக முன்னுரை கூறுகிறது.

திருக்குறள் கூறும் ஆட்சித்தத்துவத்தை,




“பொருள் இல்லாத அறம், செயல்வடிவம் பெறாத நல்லெண்ணம்”, “அறம் இல்லாத பொருள் ஊழலை ஊக்குவிக்கும்”, இன்பம் இல்லாத அறம், பொருள், மக்களை மறந்த “வெற்று அரசு இயந்திரம்” என ஒரு கோட்பாட்டு உருவகத்தை தவெக முன் வைக்கிறது. அந்தக் கண்ணாடி வழியே 10 தூண்கள் ஒவ்வொன்றின் கீழுள்ள 319 வாக்குறுதிகளுக்குள் மக்களின் கவனத்தை ஈர்க்க முயல்கிறது அறிக்கை.

மன்னராட்சி கால தத்துவமான திருக்குறளை தவெக, மக்களாட்சி கால தத்துவமாக மாற்ற முயல்வது போல் தெரிகிறது. உள்ளே சென்று பார்ப்போம்.

முதல் பிரிவு அறம். அதன்படி தூண் 01ல் 39 வாக்குறுதிகள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ‘தமிழ்நாட்டின் நிதி மற்றும் மாநில உரிமைகள் பாதுகாப்பு’ பற்றி 14 வாக்குறுதிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. “ஒவ்வொரு சமூகத்துக்கும் உரிய விகிதாச்சார பிரதிநிதித்துவம் கிடைப்பதே உண்மையான சமூகநீதி என்பதே தவெகவின் கொள்கை” எனக் கூறி சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று கூறுகிறது.

நல்லது. ஆனால் ஒன்றிய அரசின் பங்கு பற்றி எதுவும் சொல்லவில்லை. இதிலிருந்து தொடங்கி, தமிழ்நாட்டிற்குரிய நிதிப்பகிர்வு, ஜிஎஸ்டியில் நியாயமான பங்கு, கல்வியை மாநிலப்பட்டியலுக்கு கொண்டுவர சட்டப் போராட்டம், தொகுதி மறுவரையில் தமிழ்நாட்டின் உரிமைகள் பாதுகாக்க "சட்டத்திருத்தம்", "கொள்கை எதிரியான பாஜக, மாநில சுயாட்சி, கூட்டாட்சித் தத்துவத்தை பலவீனப்படுத்தும் ஒரேநாடு, ஒரே தேர்தல் முன்வரைவை திரும்பப் பெற முயற்சிகள்", இருமொழிக் கொள்கை பாதுகாப்பு, நீட் தேர்வு ரத்து, உயர்நீதிமன்றங்களில் மாநில மொழி, சென்னையில் உச்சநீதிமன்றக் கிளை, காவிரி நதிநீர், கச்சத்தீவு மீன்பிடி உரிமைகள், இலங்கைத் தமிழர்களுக்கான நீதி, "காலனிய எச்சம்" ஆளுநர் பதவி ரத்து, பல்கலை துணைவேந்தர் நியமனத்தை மாநில அரசே மேற்கொள்ள வழிவகை என அந்த 14 வாக்குறுதிகளும் பேசுகின்றன. இவற்றை பெறுவதன் மூலம் "தமிழ் அடையாளம் பெருமை" காக்கப்படும் என்று கூறுகிறது. இவைதான், கடந்த 60 ஆண்டுகளாக தமிழக அரசியலை ஆண்டு வரும் திராவிட கருத்தியல், அரசியல் என அறியப்படுகிறது. இது எந்தவகையில் திராவிட அரசியலுக்கு மாற்று என்பதையும் இவற்றை சாதிப்பதற்கு, பாஜக ஒன்றிய ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து தவெக என்ன செய்யப்போகிறது என்பது பற்றி எந்த குறிப்பையும் அறிக்கை வெளிப்படுத்தவில்லை.

தமிழ்மொழி, கலாச்சாரம், பண்பாடு, சுற்றுலா தொடர்பாக 25 வாக்குறுதிகள் அளித்துள்ள தவெக, கீழடி ஆய்வை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஒன்றிய அரசு குறித்து எதுவும் சொல்லாமலே அமைதியாக சென்றுவிடுகிறது. 13 வகையான சுற்றுலா திட்டங்கள் பற்றி அறிக்கை முன்மொழிவது புதுமையானது. ஆன்மீக சுற்றுலா, நல்லிணக்க ஆன்மீக சுற்றுலா பற்றியும் பேசுகிறது. தேர்தல் முடிவுகள் வருவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு பல கோவில்களுக்கும் ஆலயங்களுக்கும் விஜய் சென்று வந்தது கூட இந்த ஆன்மீக சுற்றுலாவின் தொடக்கமாக இருக்கலாம். ஜெயலலிதாவின் ஆஸ்தான ஜோதிடரை போயஸ் தோட்டத்திலிருந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கு கொண்டுவந்ததும் கூட ஆன்மீகத்திலுள்ள ஆழ்ந்த நம்பிக்கை காரணமாக இருக்கலாம்.

**கண்ணியமான வாழ்வு, சமூக பாதுகாப்பு!**

அறத்தின் 2வது தூண் வழியாக சொல்லப்படும் 79 வாக்குறுதிகள், தமிழ்நாட்டு மக்களின் "கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பை" உறுதிசெய்வதாக கூறுகின்றன. "வறுமை இல்லாத் தமிழகத்தை உருவாக்குவதே தவெகவின் முக்கிய குறிக்கோள் என்று பறைசாற்றும் அறிக்கை, "ஏழைக்குடும்பங்கள் கண்டறியப்பட்டு அக்குடும்பங்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவதையும் வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவது, சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்கித்தருவதும் செய்யப்படுமென்று கூறுகிறது. உலகமயக் கொள்கைகள் அறிமுகமான '90கள் முதலே 'வறுமை இல்லாத் தமிழ்நாடு' பேசப்பட்டு வருகிறது. ஜெயலலிதா இதை தொடங்கி வைத்தார். தொடர்ந்து வந்த கட்சிகளும் சொல்லி வந்தன. தவெகவும் கூறுகிறது. வறுமை இல்லா தமிழ்நாடு பற்றி மேலே சுட்டிக்காட்டியுள்ள தவெகவின் பார்வை, அரைகுறையானது, மிகவும் மேலோட்டமானது. தவெகவை பின்பற்றுவோர், தேர்தல் அறிக்கையில் சொல்லியிருப்பது ஒரு கருத்துரு மட்டுமே. திட்ட வரைபடத்தை விரைவில் அரசாங்கம் அறிவிக்கும் என்று கூட சொல்லலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

பொது விநியோகம் பற்றிய மக்கள் விருப்பங்கள், அதுதொடர்பானபோராட்டங்களைக் கவனத்தில் கொண்டிருப்பதுபோல் சில வாக்குறுதிகள் தரப்பட்டுள்ளன. வீடு தேடி ரேசன் பொருட்கள், ஊட்டச்சத்துமிக்க உணவுப் பொருட்கள், பாக்கெட்களில் அடைக்கப்பட்ட ரேசன் பொருட்கள், கலப்படத்திற்கு முற்றுப் புள்ளி, ரேசன் கடைகள் அதிகரிப்பு (500 ரேசன் கார்டுகளுக்கு ஒரு ரேசன் கடை), எடையாளர்கள் நியமனம் என சொல்லப்பட்டுள்ளன. கிராமப்புர, நகர்ப்புர ஏழைகள், சாமான்ய மக்களுக்கு இவை மிகவும் அவசியமே. இதைச் செய்வதற்கு அரசியல் உறுதி வேண்டும். எதிர்பார்ப்போம்.

ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் சிறுபான்மையினர் பாதுகாப்பு பற்றி அறிக்கை தலா 6 வாக்குறுதிகளை அளிக்கிறது. இவை வழமையானவையே. எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை. எடுத்துக்காட்டாக, எஸ்சி\எஸ்டி வன்கொடுமை விசயத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தனிப்பிரிவு உருவாக்கப்படும் என்றே சொல்கிறது. இதைத் தாண்டி, வன்கொடுமை ஏன் நடக்கிறது? யாரால் நடக்கிறது? சாதி ஆதிக்க அரசியலை தவெக அரசாங்கம் எப்படி தடுக்கப்போகிறது என வாக்களித்த தலித் மக்கள் எதிர்பார்ப்பை அறிக்கை எப்படி நிறைவேற்றப் போகிறது என்பது மிகவும் முக்கியமானது. அம்பேத்கரை கொள்கைத் தலைவராக ஏற்றுள்ள தவெக, "விளிம்புநிலை மக்களை பாதுகாக்கும்" ஒவ்வொரு கொள்கையும் அம்பேத்கரின் "வாழ்நாள் பணியிலிருந்து நேரடியாக பெறப்பட்டது" என்று அடித்துக் கூறுகிறது. ஆனால் அம்பேத்கரின் சாதி ஒழிப்பு கருத்தியல் அரசியலில் இருந்து தவெக எவ்விதமான ஒளியும் உந்துதலும் பெற்றதாகத் தெரியவில்லை.

15 லட்சம் துரித(ஜிக்) பணியாளர்களுக்கு சட்டம் இயற்றி பணிப் பாதுகாப்பும் சம்பளம், சமூகப் பாதுகாப்பும் அளிக்குமென உறுதி கூறும் அறிக்கை, 5000 கோடி ஒதுக்கீட்டில் அரசு,

காவலர், ஆசிரியர், பேராசிரியர் உள்ளிட்டு அரசு ஊழியர் நல வாரியம் ஏற்படுத்தப்படும் என்று கூறுகிறது. இது பல கேள்விகளை எழுப்புகிறது. திமுக ஆட்சிக்கு சவால் விட்டு நடந்த தூய்மைப் பணியாளர் போராட்டத்தை ஆதரித்த விஜய் வெளியிட்ட தேர்தல் அறிக்கை தூய்மைப் பணியாளரின் தனியார் கான்ட்ராக்டர் ஒழிப்பு, பணி நிரந்தரம், சட்டக்கூலி உள்ளிட்ட கோரிக்கைகளை கண்டு கொள்ளவில்லை.

சச்சார் கமிட்டி பரிந்துரை அமலாக்கம் வலியுறுத்தப்படுவது தொடங்கி, வக்ஃப் வாரிய பாதுகாப்புக்கு சட்டப்போராட்டம் வரை அறிக்கை பேசுகிறது. ஆனால், அறிக்கை கூறுவது போல "அச்சமின்றி உறங்கி, நம்பிக்கையுடன் எழும்" நிலையை உருவாக்குவதற்கான திட்டங்கள் என்ன என்ற கேள்வியே மிஞ்சுகிறது. நாடு முழுவதுமுள்ள சிறுபான்மை மக்களை இந்துத்வா பாசிச (பாயாசமல்ல) கொடுங்கோன்மையிலிருந்து பாதுகாக்கும் அரணாக தவெக இருக்குமா என்ற கேள்வியே எழுகிறது.

**பொருள் இல்லாத அறம்**

திருவள்ளுவரின் 'பொருள்' பிரிவில் முதலாவதாக மகளிர் நலனுக்காக 19 வாக்குறுதிகள் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பெரிதும் கவனத்தை ஈர்ப்பது "மகளிர் பொருளாதாரச் சுதந்திரம் காக்கும்" மாதம் ரூ. 2500, அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் (சூப்பர் சரவணாஸ் நினைவுக்கு வருகிறது. ஆண்டுக்கு 6 எரிவாயு சிலிண்டர்) அரசுப்பேருந்துகள் அனைத்திலும் கட்டணமில்லா வெற்றிப் பயணம்", "அண்ணன் சீர் திட்டம்", "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" (அண்ணன், தாய்மாமனாவது தமிழ்நாட்டு மரபுதானே! ஆனால் திருக்குறள் மரபில் உள்ளதா என்பதை தோண்டித் துருவிப் பார்க்க வேண்டும்) என வரிசை கட்டி நிற்கின்றன. சிங்கப் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு 5 லட்சம் வட்டியில்லாக் கடன், திருப்பித் தரத் தேவை இல்லாத 5 லட்சம் முதலீட்டு மானியம் போன்றவை அறிவிக்கப்பட்டுள்ளன. இது மோடி அரசாங்கத்தின், ஒரு கோடி பெண் லட்சாதிபதிகள் திட்டத்தை ஒத்ததுதான். தமிழ்நாட்டின் கிராமப்புற பெண்கள் ஆண்டுக்கு 90 ஆயிரம் கோடி முதல் 1.5 லட்சம் கோடி வரை தனியார் நுண்கடன் இரும்புச் சங்கிலிகளால் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சங்கலிகள் முழுவதுமாக அறுத்தெறியப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தால் தவெகவுக்கு வாக்களித்தப் பெண்கள் உண்மையில் பொருளாதாரச் சுதந்திரத்தை நோக்கிய முதல் அடி எடுத்து வைக்க முடியும்.

"சமரசமற்ற பெண்கள் பாதுகாப்பு"க்காக ராணி வேலுநாச்சியார் படை அமைக்கப்படும் என்கிறது. இந்த நவீன நாச்சியார் படை உடலில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கேமராக்களுடன் 500 கண்காணிக்கும் குழுக்களாக இருக்கும். (பின் ஏன் அய்ஜி தலைமையில் காவல் துறை அதிகாரிகள்)? பின்னர் இந்த வேலுநாச்சியார் படையில் தவெக இளம் பெண்கள் இணைக்கப்பட்டு, காவல்துறை பயிற்சியுடன் மிகக் குறைவான ஊதியம் வழங்கி சிங்கப் பெண் படையாக மாற்றப்படக் கூடும். வேறு திட்டமும் இருக்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம். பழங்குடிப் பெண்களுக்கு சோலார் அடுப்புகள் புதிய வாக்குறுதி. தவெக வின் மற்றொரு கொள்கைத் தலைவரான "பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் மகளிர் விடுதலை, பெண்கள் கல்வி, சமூக சீர்திருத்தத்தின் ஓர் அர்த்தமுள்ள போராட்டத்தின்" தொடர்ச்சியை தேர்தல் அறிக்கையில் பார்க்க முடியவில்லை.

4வது தூண் வழியாக 17 வாக்குறுதிகளில் இளைஞர் நலன் பேசப்படுகிறது. வேலை இல்லா உதவித்தொகை, அரசுப்பணி நியமனங்களை நேர்மையாக முறையாக நடைமுறைப்படுத்த சிறப்புச் சட்டம், (இப்போதுள்ள டிஎன்பிசி என்னாகும்)? 5 லட்சம் இளைஞர்களுக்கு தொழில் நிறுவனங்களில் பயிற்சி (பட்டதாரிகளுக்கு ரூ.10000, தொழிற்கல்வி பயின்றவர்களுக்கு ரூ.8000 உதவித்தொகை), 75% தமிழ்நாட்டு இளைஞர்களை பணிக்கு அமர்த்தும் நிறுவனங்களுக்கு ஜிஎஸ்டி வரிச்சலுகை, 5 லட்சம் இளைஞர்கள் மக்கள் சேவைத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ.18,000 ஊதியத்தில் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப் படுவர் (ஏற்கனவே திமுக ஆட்சியிலிருந்த மக்கள் நலப்பணியாளர் திட்டத்தின் தொடர்ச்சியா?), 25 நகரங்களில் மைக்ரோ டெக் பார்க் (ஸ்டாலின் தோல்வியடைந்த கொளத்தூரில் இருப்பது போல) வீட்டிலிருந்தே உலக அளவில் வேலை செய்யும் வாய்ப்பு உருவாக்கித் தரப்படும் (இதனால் எவ்வளவு பேர் பயன்பெறுவார்கள் என்பது சொல்லப்படவில்லை) போன்ற வாக்குறுதிகள் தரப்பட்டுள்ளன. ஆனால் புதிய தலைமுறையை (ஜென் ஜி) எந்த லட்சிய நோக்கத்தையும் நோக்கி கொண்டு செல்லும் ஆர்வம் இருப்பதாக தெரியவில்லை.

**விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள், மீனவர் நலன்**

மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ள இந்த மிக முக்கியமான சமூகம் குறித்து தேர்தல் அறிக்கை, 45 வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. "விவசாயிகள் நலன், மீனவர் நலன், நீர்மேலாண்மை விவசாய கண்டு பிடிப்புகள், கால் நடை பால் பொருட்கள் மேம்பாடு" என 4 பிரிவுகளில் இந்த வாக்குறுதிகள் தரப்பட்டுள்ளன. 5 ஏக்கருக்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கி கடன் தள்ளுபடி, 5 ஏக்கருக்கு மேலுள்ள வர்களுக்கு 50% தள்ளுபடி, மகளிர் உரிமைத் தொகை போல விவசாயிகள் உரிமைத் தொகை (இரண்டு தவணைகளில் ரூ 15000), உழவர் தோழர் திட்டம், (ஜெயலலிதா ஆட்சியில் உழவர்

அட்டை இருந்தது போல் இப்போது 'உழவர் உரிமை அட்டை') கால்நடை வாங்க கடன், உழவர் உற்பத்தியாளர் அமைப்பில் இணையும் விவசாயிகளுக்கு ரூ. 5000 ஊக்கத் தொகை போன்ற இன்னும் பல அறிவிப்புகள் உள்ளன. இவை எதுவும் புதிதில்லை. கடந்த ஆட்சிகள் செய்ததை வேறு பெயர்களிலோ கூடுதலான எண்களிலோ சொல்கிறது. அதிர்ச்சி என்னவென்றால், ஒரு கோடிக்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர், கிராமப்புர தொழிலாளர் பற்றி அறிக்கை அமைதி காக்கிறது.

தூண் 7ல் வளமான தமிழ்நாட்டுக்கான வாக்குறுதிகள் தரப்பட்டிருக்கிறது. திமுக ஆட்சி சொல்லி வந்த 1 ட்ரில்லியன் பொருளாதாரத்தை 1.5 ட்ரில்லியன் பொருளாதாரமாக உயர்த்தி "இதுவரை இல்லாத வளர்ச்சி" ஏற்படுத்தப்படும் என்று தேர்தல் வாக்குறுதி சொல்கிறது. இந்த 'வளமான தமிழ்நாடு' 15 பக்கங்களில் 32 வாக்குறுதிகளாக விரிகிறது. தமிழ்நாட்டின் உற்பத்திப் பொருள்களை உலகமயமாக்குவது, தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களையும் மண்டல வாரியாக பிரித்து அங்குள்ள நிலமைகளுக்கு உகந்த தொழில் முயற்சிகளை நிறுவுவது. அந்த வகையில் விரிவான தொழில் மயமாக்கத்தைப்பற்றி பேசுகிறது. "விவசாய விளைநிலங்கள் கைப்பற்றப்படாது" என்று கூறினாலும் சொல்லப்படும் இந்த பெரும் தொழில் திட்டங்கள் பகாசுர பசியோடு விவசாய நிலங்களை விழுங்கி விடும். விவசாயம் மேலும் வீழ்ச்சியடையும். 30 லட்சம் ஏக்கர் விவசாய பரப்பு அதிகரிப்பு சாத்தியமில்லை. வளமான தமிழ்நாட்டுக்கு தொழில் வளர்ச்சி மட்டுமே முதுகெலும்பு என்று அறிக்கை சொல்கிறது. பெருங்குழும உலகமயமாக்க கொள்கைகளே தவெக தேர்தல் அறிக்கையின் முதுகெலும்பாகவும் மூளையாகவும் முகமாகவும் இருக்கிறது என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். நிலம், நீர், மின்சாரம், வரிவிதிப்பு அனைத்தையும் மய்யப்படுத்தி கைகளில் வைத்திருக்கும் ஒன்றிய அரசு மாநில ஆட்சிகளை ஒரு நகராட்சி அளவுக்கே வைத்திருக்கிறது. அந்த அதிகாரத்தை எதிர்த்து, அதன் பகாசுர கார்ப்பரேட் கொள்கைகளை எதிர்த்துப்போராடுவது வளமான தமிழ்நாட்டிற்கு அவசியம். பொறுத்திருந்து பார்ப்போம்.

திருவள்ளுவரது ஆட்சித் தத்துவம் சொல்கிறது,

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி" (குறள் எண் 542).

இதிலிருந்து உந்துதல் பெற்றதாலோ என்னவோ 94 பக்க தவெக தேர்தல் அறிக்கையில் உள்ளாட்சி அதிகாரம் (அமைப்பு) பற்றி எதுவும் இல்லை!

இன்பம் பற்றி அறிக்கை என்ன சொல்கிறது? அடுத்த இதழில் பார்க்கலாம்.❑


– பாசு

## மேற்குவங்க தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகளுக்கு எதிராக இடதுசாரிகள் பேரணி

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அரங்கேறி வரும் அரசியல் வன்முறைகளைக் கண்டித்து, சிபிஐ எம் எல் உள்ளிட்ட இடதுசாரி கட்சியினர் கொல்கத்தாவில் மாபெரும் கண்டனப் பேரணியை நடத்தினர். கடந்த மே 7-ம் தேதி முர்ஷிதாபாத் மாவட்டத்தின் ஜியாகஞ்ச் பகுதியில் லெனின் சிலை சேதப்படுத்தப்பட்ட நிகழ்வு பதற்றத்தை ஏற்படுத்திய நிலையில், அதனைத் தொடர்ந்து மே 8-ம் தேதி கொல்கத்தாவின் மையப்பகுதியான எஸ்பிளனேட் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்ற எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. தேர்தல் வெற்றி கொண்டாட்டங்கள் என்ற பெயரில் உழைக்கும் மக்கள், சிறுபான்மையினர் மற்றும் இடதுசாரித் தொண்டர்களின் வீடுகள் மற்றும் கட்சி அலுவலகங்கள் மீது திட்டமிட்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக இந்தப் பேரணியில் தலைவர்கள் குற்றம் சாட்டினர். இடது முன்னணித் தலைவர் பிமன் பாசு மற்றும் சிபிஎம் மாநிலச் செயலாளர் முகமது சலீம் உள்ளிட்டோர் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், ஜனநாயக அமைப்புகள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தவும், மாநிலத்தின் மதச்சார்பற்ற மாண்பினைப் பாதுகாக்கவும் அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுக்கப்பட்டது. வன்முறைச் சூழலுக்கு மத்தியில் புதிய அரசு பதவியேற்றுக் கொண்ட நிலையில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத் தவறியதாகக் கூறி இடதுசாரிகள் தங்கள் எதிர்ப்பைத் தொடர்ந்துப் பதிவு செய்து வருகின்றனர்.



# அமைப்பு தொடர்பாக



**மங்கை**
**12.5.2026**

நமது அரசியல் நிலைப்பாடுகளை நிறுவ, பொதுவாக மார்க்சிய முன்னோடிகளின் மேற்கோள்களைத் துணைக்கழைப்பதைத் தவிர்ப்பது நல்லது. நமது நிலைப்பாடுகளுக்கான காரணங்களை, மேற்கோள்கள் இல்லாமல் சொல்லும் வலிமை வாய்ந்த புரிதலும், அவற்றை திறம்பட வெளிப்படுத்துதலும் நமக்கு தேவையாகும்.

எந்த விதிக்கும் விதிவிலக்கு உண்டு அல்லவா? இந்தத் தருணத்தில், நமக்கு உடனடியாக தோழர்கள் ஸ்டாலின், லெனின், மாவோ ஆகியோர் சுட்டிக்காட்டிய சில விசயங்கள் கவனத்திற்கு வருகின்றன. ஸ்டாலின் என்றால் இறுக்கம், கறார், கடுமை என இடது சாரி தோழர்களும், அவர் ஒரு கொடிய சர்வாதிகாரி என வலது சாரி பிற்போக்களார்களும் சொல்வார்கள். தோழர் ஸ்டாலின் காலத்தில் தான், சோசலிச சோவியத் ஒன்றியம் இலக்கியங்களில் திளைத்தது என்ற விவரம் உரிய கவனத்தைப் பெறவே இல்லை. ஒரு நாடு இலக்கியங்களில் திளைக்கிறது என்றால், அங்கே கலாச்சார மட்டமும், அறிவார்ந்த புரிதலும் உயர்ந்து இருந்தன எனக் கருத முடியும் தானே!. தோழர் ஸ்டாலினின் நகைச்சுவை உணர்வுக்கும், அமைப்பு பற்றிய கரிசனத்திற்கும் ஓர் உதாரணத்தைக் காண்போம்.

தோழர் ஸ்டாலின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, இரண்டாம் உலகப் போரில் பாசிசத்தை முறியடிப்பதற்கு முன்பு, 1937 ஆம் ஆண்டு கட்சியின் 17 ஆவது பேராயத்தில் அவர் பேசியதிலிருந்து சில பகுதிகளை கவனிப்போம்:

“நான் கூறுவது வாய்வீச்சு வீரர்களைப் பற்றியது. நேர்மையான வாய்வீச்சு வீரர்கள் என்று கூடச் சொல்லலாம். (சிரிப்பு, இவர்கள் சோவியத் அரசாங்கத்திற்கு நேர்மையாகவும், விசுவாசமாகவும் இருப்பவர்கள். ஆனால் நிர்வாகிகளாக இருக்கத் தகுதியற்றவர்கள். எதையும் முறைப்படுத்தி ஏற்பாடு செய்ய இலாயக்கற்றவர்கள். சென்ற ஆண்டு இதுபோன்ற ஒரு தோழருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் மிகவும் மதிப்பிற்குரிய தோழர். ஆனால் திருத்த முடியாத வாய்வீச்சுக்காரர். தமது பேச்சு வெள்ளத்தில், முக்கியமான எதையும் மூழ்கடிக்கக் கூடிய வாய்வீச்சு வீரர் அவர்”.

நாங்கள் பேசியது இதுதான்.

**நான்:** விதைப்பு எந்த அளவில் இருக்கிறது, தோழரே?

**அவர்:** விதைப்பா, தோழர் ஸ்டாலின்? நாங்கள் எங்களைத் திரட்டியிருக்கிறோம்.

(சிரிப்பு).

**நான்:** சரி! அதற்குப் பிறகு?

**அவர்:** நாங்கள் பிரச்சினையை நேர்மையாக முன்வைத்தோம். (சிரிப்பு)

**நான்:** பிறகு என்ன நடந்தது?

**அவர்:** ஒரு திருப்பம் ஏற்பட்டது, தோழர் ஸ்டாலின்! கூடிய விரைவில் ஒரு திருப்பம் இருக்கும்.

(சிரிப்பு)

**நான்:** இதுவரை என்ன நடந்தது?

**அவர்:** முன்னேற்றத்திற்கான அறிகுறி இருக்கிறது என்று எங்களால் கூற முடியும்.

(சிரிப்பு).

**நான்:** எல்லாம் சரி! விதைப்பு எந்த அளவில் இருக்கிறது?

**அவர்:** இதுவரை விதைப்பிற்கான எந்த ஏற்பாட்டையும் நாங்கள்

ஆரம்பிக்கவில்லை தோழர் ஸ்டாலின்

(பலத்த சிரிப்பு)

“இங்கே நீங்கள் வாய்வீச்சு வீரர்களின் அங்க இலட்சணத்தைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். அவர்கள் தங்களைத் திரட்டிக் கொண்டார்கள். பிரச்சினையை நேர்மையாக முன்வைத்தார்கள். ஒரு திருப்பத்தையும் சிறிது முன்னேற்றத்தையும் ஏற்படுத்தினார்கள். ஆனால் பிரச்சினை அப்படியேதான் இருக்கிறது”.

“அண்மையில், ஒரு உக்ரேனியத் தொழிலாளியிடம் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்கு குறிக்கோள் ஏதேனும் உள்ளதா என்று கேட்டபோது, ‘அவர்களுக்குக் குறிக்கோள் இருக்கத்தான் செய்கிறது; ஆனால் அவர்கள் எந்த வேலையும் செய்வதாகத் தெரியவில்லை’ என்று அந்த அமைப்பின் நிலைமையை மிகச் சரியாகவே விவரித்தார்.

(சிரிப்பு)

இதிலிருந்து அந்த நிறுவனமும் தன் பங்கிற்கு நேர்மையான வாய்வீச்சுகாரர்களைக் கொண்டிருக்கிறது என நிரூபணமாகிறது”.

“இப்படிப்பட்ட வாய்வீச்சுக்காரர்களைப் பதவிகளிலிருந்து நீக்கி, நடைமுறை வேலைகளுக்குத் தொடர்பில்லாத பணிகளில் அவர்களைப் பொருத்தும் போது, அவர்கள் தங்களது தோள்களை வியப்புடன் குலுக்கிக் கொண்டு, எங்களை ஏன் நீக்க வேண்டும்? வேலை நடப்பதற்கு அவசியமான அனைத்தையும் நாங்கள் செய்யவில்லையா? கடும் உழைப்பை தன்னார்வத்துடன் மேற்கொள்ளும் தொழிலாளிகளின் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்யவில்லையா? அந்த தொழிலாளிகளின் மாநாட்டில் கட்சி மற்றும் அரசாங்கத்தின் முழக்கங்களை நாங்கள் முழங்கவில்லையா? மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக் குழுவிலிருந்து கவுரவத் தலைமைக் குழு வரை அனைத்தையும் நாங்கள் தேர்ந்தெடுக்கவில்லையா?

(சிரிப்பு)

நாங்கள் தோழர் ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களை அனுப்பவில்லையா? இன்னும் என்னதான் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்?”

(பலத்த சிரிப்பு).

“இந்த திருத்த முடியாத வாய்வீச்சு வீரர்களை என்ன செய்ய வேண்டும்? நடைமுறை வேலைகளில் இவர்களை நீடிக்க விட்டால், இவர்கள் தங்களது முடிவே இல்லாத பேச்சு வெள்ளத்தில் உயிருள்ள இலட்சியங்களை மூழ்கடித்து விடுவார்கள். சந்தேகத்துக்கிடமின்றி, தலைமைப் பொறுப்புகளிலிருந்து இவர்களை நீக்கி, நடைமுறைக்குத் தொடர்பில்லாத வேலைகளைக் கொடுக்க வேண்டும். நடைமுறை வேலைகளில் வாய்வீச்சு வீரர்களுக்கு இடமே இல்லை. (குரல்கள்: ஆமாம்! ஆமாம்! பலத்த கைதட்டல்)

21ஆம் நூற்றாண்டு சோசலிசத்தை நிறுவ, இதே காலத்திற்கான கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவ, தமிழ்நாட்டில் சூரியனோடும், இலையோடும் மட்டுமல்லாமல் விசிலோடும், அரசியல் செல்வாக்குக்காக போட்டியிட்டு நமக்கான இடத்தைப் பெற வேண்டும். வெற்று வாய்வீச்சு நிச்சயம் உதவாது. தனித்தனி தோழர்களை வாய்வீச்சு வீரர்களாகக் காணாமல், செயலில் இருந்து பிரிந்த வெற்று வாய்வீச்சுக்கு முடிவு கட்டுவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தோழர் ஸ்டாலின் விளைச்சலைப் பற்றி அக்கறை கொண்டிருந்தார். நாமும், மக்கள் போராட்டங்கள் பற்றி, அவற்றை ஆழமாகவும், விரிவாகவும் முன் எடுப்பது பற்றி, கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் மக்கள் திரள் அமைப்புக்களையும் கட்டி எழுப்புவது பற்றி செயலில் கவனம் செலுத்த வேண்டும். வாய் சொல் வீச்சு நம்மை ஓரடி கூடி முன்னே செல்லவிடாமல், பின்னுக்கு இழுக்க மட்டுமே உதவும்.

டிரம்ப் சீனாவுக்குச் சென்று ஜீ பிங்கைச் சந்திக்க இருக்கின்ற நேரம், நமக்கு மாவோ நினைவுக்கு வருகிறார். குதிரை மேல் அமர்ந்து கொண்டே, செடியைப் பற்றி, அதன் இலை, பூ, காய், கனி பற்றி நாம் அறிய முடியாது; மாறாக குதிரையை விட்டு கீழே இறங்கி, செடிக்குப் பக்கத்தில் போய் செடியை ஆராய வேண்டும்; இலையை, பூவை, காயை, கனியை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். குதிரை மேல் அமர்ந்து கொண்டே, குதிரையை வேகமாக செலுத்திக் கொண்டே, வேலைகளை அணுகுவது நல்லதல்ல என்ற அளவில், நமக்கு மாவோ சொன்ன விசயங்கள் புரிதலை வழங்குகின்றன.

பொறுப்புள்ள விவசாயி, மண்ணைப் பதப்படுத்தி, விதை போட்டு, உரம் சேர்த்து, மருந்து அடித்து, நீர் பாய்ச்சி, கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டால் தான், நல்ல விளைச்சல் கிடைக்கும். பாட்டாளி துல்லியமாய் வேலை செய்தால்தான், உற்பத்திப் பொருளுக்கு சந்தை இருக்கும். ஒவ்வொரு நாளும் கவனித்து தரமான உற்பத்தி செய்ய வேண்டும்.

விவசாய தொழிலாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், இதர பகுதி மக்கள் மத்தியிலான நமது வேலைகளை, கம்யூனிஸ்ட் கட்சி வேலைகளை, நாம் குதிரையிலிருந்து இறங்கி பார்த்து செய்ய வேண்டும். கண்ணும் கருத்துமாக, நாளும், பொழுதும் கவனித்து கட்சிப் பயிரை, இயக்கப்பயிரை வளர்க்க வேண்டும்.

தோழர் லெனின் என்ன செய்ய வேண்டும் நூலில், தொழில்முறை நேர்த்தியுடன் இயக்கப் பணி பார்ப்பது பற்றியும் கற்றுக்குட்டித்தனமாய் வேலை பார்ப்பது பற்றியும் எழுதி உள்ளார். அவர் கற்றுக்குட்டித்தனத்தை வேலைத்திறனோடு சுருக்கவில்லை. அவர், சிந்தனையில், செயல் பரப்பில் என அனைத்து தளங்களிலும் இருக்கிற குறுகிய தன்மையை, கற்றுக்குட்டித்தனம் என அடையாளப்படுத்துகிறார்.

“களைகளை எதிர்த்துப் போரிடுவது நம் பணி. பூந்தொட்டிகளில் தானியம் விளைவிப்பது நம் வேலை அல்ல. களை எடுப்பதால்,

நாம் தானியம் பயிர் இடுவதற்கு நிலத்தை பண்படுத்துகிறோம்.''

''பூந்தொட்டிப் பயிர்களை சிலர் கவனித்துக் கொண்டிருக்கும் போது, நாம் அரிவாளை தயாரித்து வர வேண்டும் - இன்றைய களைகளை வெட்டி எறிவதற்கு மட்டும் அல்ல, நாளைய பயிர்களை அறுவடை செய்வதற்கும் கூட.''

தோழர் லெனின் மேலே உள்ள விஷயங்களைக் குறிப்பிட்ட பின்னணி சற்று வேறுபட்டதாகும். ஆனால், பூந்தொட்டியில் பயிர் வைப்பதற்கும், வயலில் பயிர் வைப்பதற்கும் இடையிலான வேறுபாட்டையும் தோழர் லெனின் சுட்டிக் காட்டுகிறார். நல்லெண்ணம் கொண்ட இயக்கத் தோழர்கள் சிலர் நாம் பூந்தொட்டியில் பயிர் வைப்பது தான் விவசாயம் என நம்ப துவங்கி விடுகிறார்கள். மக்களுக்கான விவசாயத்திற்கு, நீண்ட அகன்ற விளை நிலங்கள் வேண்டும். நமது அரசியல் - அமைப்பு பணிகள், பூந்தொட்டி விவசாயமாக அமைய முடியாது.

வெற்றி நம்மைத் தேடி வராது.

நாம்தான் அதனைத் தேடி அடைய வேண்டும். நமது பிரகடனங்களும் தீர்மானங்களும் வெற்றிக்கான நமது விருப்பத்தை மட்டுமே உணர்த்துகின்றன. நமது அரசியல் வழியின் தேவைகளுக்கும், நமது அமைப்பு வேலைகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை அகற்றுவதன் மூலமே, வெற்றி சாத்தியமாகும்.

அமைப்பு தொடர்பாக வேறு வேறு விஷயங்களைக் காணும் போது, கடைசியாக, கனவு காண்பது பற்றி தோழர் லெனின் குறிப்பிட்டதை சற்று பார்ப்போம்.

''நாம் கனவு காண வேண்டும்!'' என்று எழுதினேன், எழுதிவிட்டு பயந்து போனேன். நான் ஓர் ''ஒற்றுமை மாநாட்டில்'' உட்கார்ந்திருப்பது போலவும் எதிரே ரபோச்சியே தேலோ ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் உட்கார்ந்திருப்பது போலவும் கற்பனை செய்தேன். தோழர் மார்தீனவ் எழுந்து என் பக்கம் திரும்பி கடும் கண்டிப்புடன் ''கட்சிக் கமிட்டிகளின் கருத்தை முதலில் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் சுயேச்சையுள்ள ஓர் ஆசிரியர் குழுவுக்குக் கனவு காண உரிமையுண்டா?'' என்று சொல்கிறார். அவரைத் தொடர்ந்து தோழர் கிரிச்சேவ்ஸ்கி வருகிறார். (வெகு காலத்திற்கு முன்பே தோழர் பிளெஹானவை விட ஆழமாகப் பார்த்த தோழர் மார்தீனவை மெய்யறிவு விஷயத்தில் மிஞ்சி ஆழமாகப் பார்க்கும்) இவர் மேலும் கடுங்கண்டிப்புடன் ''நான் இன்னும் மேலே போய் கேட்கிறேன்: மார்க்ஸின் கருத்துப்படி தன்னால் நிறைவேற்றக்கூடிய பணிகளைத்தான் எப்போதும் மனித குலம் எடுத்துக் கொள்கிறது என்பதை அறிந்திருந்தும், கட்சியோடு கூடவே வளர்கிற கட்சிப் பணிகளின் வளர்ச்சியைச் சேர்ந்த நிகழ்வுப்போக்குதான் போர்தந்திரம் என்பதையும் அறிந்திருந்தும் ஒரு மார்க்சியவாதிக்குக் கனவு காண உரிமையுண்டா?'' என்கிறார்.

இந்தக் கடுங்கண்டிப்புள்ள கேள்விகளை நினைத்துப் பார்த்தாலே எனக்குப் பயமாய் இருக்கிறது. எங்காவது போய் ஒளிந்து கொள்ளலாம் போலிருக்கிறது. நான் பீசரெவிடம் தஞ்சம் புகலாம் என நினைக்கிறேன்.

கனவுகளுக்கும், எதார்த்தத்துக்குமுள்ள வேற்றுமை பற்றி பீசரெவ் எழுதியதாவது: ''வேற்றுமைகளில் பலவகை உண்டு. நிகழ்ச்சிகளின் இயல்பான நடையைத் தாண்டி என் கண் முன் கனவு முன்னே ஓடக்கூடும், அல்லது நிகழ்ச்சிகளின் எந்த இயல்பான நடையும் என்றைக்கும் போகாத ஒரு திசையில் அது பாய்ந்தோடலாம். முதலில் சொன்ன வழக்கில், என் கனவு தீங்கெதுவும் செய்யாது. அது தொழிலாளியின் ஆற்றலை ஆதரித்து அதிகப்படுத்தவும் கூடும்.... உழைப்புச் சக்தியை உருக்குலைக்குவோ முடக்கவோ செய்கிற வகையில் இக்கனவுகளில் ஏதுமில்லை. மாறாக இவ்வடிவில் கனவு காணும் திறமை மனிதனிடமிருந்து முற்றாக பறிக்கப்பட்டால், தன் கைகள் உருவங்கொடுக்கத் தொடங்கியிருக்கும் பொருளைப் பற்றி மனிதன் அவ்வப்பொழுது முன்னே ஓடி ஒரு முழுமையான முடிவுற்ற சித்திரத்தை மனதில் உருவாக்கிக் கொள்ள முடியாமற்போனால், அவன் கலைத் துறையிலோ விஞ்ஞானத் துறையிலோ நடைமுறை செயல்துறையிலோ விரிவான, கடுமையான பணிகளை மேற்கொள்ளும்படி செய்யக்கூடிய தூண்டுகோல் வேறெது என்று என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.... கனவு காண்பவர் காரியப்பற்றோடு தன் கனவை நம்பினால் போதும், வாழ்க்கையை அவர் உன்னிப்புடன் கவனித்துத் தன் ஆகாயக் கோட்டைகளுடன் தன் கூர்நோக்குகளை ஒப்பிட்டுப் பார்த்து, பொதுவாகவே தன் கற்பனைகளை யதார்த்தமாக்கிக் கொள்ள உண்மையாக உழைத்தால் போதும், கனவுக்கும் யதார்த்தத்திற்குமுள்ள வேற்றுமையினால் எந்தத் தீங்கும் விளையாது. கனவுக்கும் வாழ்க்கைக்கும் இடையே கொஞ்சம் தொடர்பிருந்தால் எல்லாம் சரி. துரதிஷ்டவசமாக, இப்படிக் கனவு காண்பது நம் இயக்கத்தில் அரிதாகவே உள்ளது.''

நமது மாநிலத்தில், நமது நாட்டில், சர்வதேச அளவில், இடதுசாரி அரசியலுக்கு, இயக்கத்திற்கு, கட்சிக்கான தேவை உள்ளது. போட்டி அரசியல் களத்தில் நுழையவும், போட்டியிடவும், நாம் தயாராக வேண்டும். சிந்திக்கத் துணிவதும் போராடத் துணியவும் வெற்றி பெறத் துணியவும் இடதுசாரிகள் தயாராக வேண்டும். ❑

# தேர்தலுக்குப் பிந்தைய நிகழ்வுகள்:
# வெற்றிச் செருக்கு, பேரச்சம், பொருளாதார முடக்கம்

மேற்கு வங்கம், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களின் நாடகத்தனமான முடிவுகள் வெளியாகி ஒரு வாரம் கடந்துவிட்டது. எஸ்ஐஆர் மூலம் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட தனது வெற்றியை, அச்சத்தின் வெற்றி அல்ல, அது நம்பிக்கையின் வெற்றி என பாஜக முன்னிறுத்திய போதிலும், தேர்தலுக்குப் பிந்தைய மிகப்பெரிய வன்முறையையும் சூறையாடல்களையும் மேற்கு வங்கம் இந்த ஒரு வார காலத்தில் சந்தித்துள்ளது. சாதாரண இஸ்லாமியர்களின் உயிர்களும் வாழ்வாதாரமும் எதிர்க்கட்சி அலுவலகங்களும் செயல்பாட்டாளர்களும் லெனினின் சிலைகளும் மட்டுமல்லாமல் வங்கத்தின் இஸ்லாமிய பாரம்பரிய அடையாளங்களான சித்து-கானு ஆகியோரின் சிலைகள், நிலப்பிரபுத்துவ-காலனித்துவ எதிர்ப்பு போராளிகளின் நினைவிடங்கள், காவிமயமாக்கப்படும் அபாயத்திற்கு உள்ளாகியுள்ள வங்கத்தின் மாபெரும் சிந்தனையாளர்களின் உருவப்படங்கள் ஆகியவை பயங்கரத்தின் இந்தத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இந்த வெற்றிச் செருக்கின் கொண்டாட்டங்களுக்கு மத்தியில், மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் அடிப்படையிலான தேர்தல்களை மேற்பார்வையிட்ட அதிகாரிகளுக்கு கைமாறாக வெகுமதி அளிக்கும் வகையில், மாநில நிர்வாகம் அப்பட்டமாக மறுசீரமைக்கப்படுவதையும் நாம் காண்கிறோம். தேர்தல் சிறப்புப் பார்வையாளர் சுப்ரதா குப்தா இப்போது புதிய முதலமைச்சரின் முதன்மை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்; அத்துடன் தலைமை தேர்தல் அதிகாரி மனோஜ் அகர்வால் புதிய தலைமைச் செயலாளராகியுள்ளார்.

வன்முறையின் பொதுவான வகைமாதிரியிலிருந்தும் திசையிலிருந்தும் மர்மமான விதிவிலக்காக சந்திரநாத் ரத்தின் கொலை அமைந்திருந்தது. அவர் இந்திய விமானப்படையின் முன்னாள் தொழில்நுட்ப பணியாளர். கடந்த ஆறு ஆண்டுகளாக சுவேந்து அதிகாரியின் நிர்வாக உதவியாளராகப் பணியாற்றி வந்தார். மே 6 ஆம் தேதி நடந்த சந்திரநாத் ரத்தின் கொலை, கடந்த காலத்தில் சுவேந்து அதிகாரிக்காகப் பணியாற்றிய மூன்று பேரின் - 2013 இல் பிரதீப் ஜா, 2018 இல் சுபப்ரதா சக்ரவர்த்தி, 2021 இல் புலாக் லஹிரி - மர்ம மரணங்கள் குறித்த நினைவுகளை மீண்டும் கிளறியுள்ளது. இந்தத் தொடர் மரணங்கள் அனைத்தும் இன்னும் மர்மமாகவே நீடிக்கின்றன. இப்போது சுவேந்து அதிகாரி மேற்கு வங்க முதல் பாஜக அரசின் முதலமைச்சராகிவிட்ட நிலையில், இந்த ஒட்டுமொத்த தொடர் நிகழ்வுகள் குறித்து நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

2016 மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, சுவேந்து அதிகாரி லஞ்சம் வாங்குவதை அம்பலப்படுத்திய ரகசிய நடவடிக்கையின் காணொளி (ஸ்டிங் ஆபரேஷன்) பரவலானபோது, அவர் தேசிய அளவில் கவனம் பெற்றார். பிரதமர் மோடி, அப்போதைய பாஜக தலைவர் அமித் ஷா இருவருமே திரிணாமுல் காங்கிரஸுக்கு எதிரான பரப்புரைக்கு இந்த காணொளியைப் பயன்படுத்தினர். ஆனால், பாஜகவில் இணைவதற்கு முன்பு அக்கட்சியினரால் ஊழலின் உருவகமாகக் குறிவைக்கப்பட்ட அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ஹிமந்தா பிஸ்வா சர்மாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, சுவேந்து அதிகாரியும் 2020-ஆம் ஆண்டில் பாஜகவில் இணைந்தார். தற்போது அசாமில் ஹிமந்தா பிஸ்வா சர்மா, பீகாரில் சாம்ராட் சவுத்ரி, மேற்கு வங்கத்தில் சுவேந்து அதிகாரி என, முறையே காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகளில் தங்களது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, தங்கள் மீது கடுமையான ஊழல், கிரிமினல் குற்ற புகார்களைக் கொண்டிருந்த இந்த மூன்று அரசியல்வாதிகளுக்கும் பாஜக அந்தந்த மாநிலங்களின் முதலமைச்சர்களாக மறுவாழ்வு அளித்துள்ளது. மேலும், இவர்கள் அனைவரும் யோகி பாணியிலான புல்டோசர் ஆட்சியின், வெறுப்பைக் கக்கும் சின்னங்களாக உருவெடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில், அதிக இடங்களை பெற்ற தனிப்பெரும் கட்சி அல்லது தேர்தலுக்கு முந்தைய கூட்டணியின் தலைவரை ஆட்சியமைக்க அழைக்கும் அரசியலமைப்பு மரபிலிருந்து விலகிய ஆளுநர், தவெக தனது பெரும்பான்மை ஆதரவிற்கான எழுத்துப்பூர்வமான ஆதாரத்தை அளிக்கும் வரை காத்திருந்தார். காங்கிரஸ், விசிக, சிபிஐ, சிபிஐ(எம்), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன், தவெக தலைவர் சி. ஜோசப் விஜய் இறுதியாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இந்தியக் குடியரசின் கூட்டாட்சிக் கட்டமைப்பை நிலைநிறுத்தும் ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக சக்தியாக தவெக தன்னை முன்னிறுத்திக் கொள்வதை ஆரம்பகால அறிகுறிகள் உணர்த்துகின்றன. அந்த வகையில், தென்னிந்தியாவில் பாஜகவின் தேர்தல் ரீதியான முன்னேற்றத்தைத் தமிழ்நாடும் கேரளமும் தொடர்ந்து நிராகரித்தும் தடுத்தும் நிற்கின்றன



என்று நாம் கூறலாம்.

மே 4 தேர்தல் முடிவுகளின் அரசியல் விளைவுகளுக்கு அக்கம்பக்கமாக, மோடி அரசாங்கத்தால் திணிக்கப்பட்டுள்ள அறிவிக்கப்படாத பொருளாதார அவசர நிலையையும் இப்போது நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயுவின் மிகப்பெரிய விலை உயர்விலும் அது ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் சங்கிலித்தொடர் விளைவுகளிலும் தொடங்கி, பிரதமரின் முழுமையான புதிய சிக்கன அறிவுரைகளின் தொகுப்பை நாம் இப்போது எதிர்கொள்கிறோம். குறைந்தது ஐம்பது வாகனங்கள் கொண்ட அணிவகுப்பில் பயணிக்கும் பிரதமர், 8,000 கோடி ரூபாய் மதிப்பிலான சொகுசு விமானத்தில் பறக்கும் பிரதமர், மக்கள் வீட்டிலிருந்தே வேலை செய்ய வேண்டும், குறைந்த அளவு பெட்ரோலையும் அதைவிடக் குறைந்த அளவு சமையல் எண்ணெயையும் பயன்படுத்த வேண்டும், மேலும் அடுத்த ஓராண்டுக்கு வெளிநாட்டுப் பயணம் எதையும் மேற்கொள்ளக்கூடாது என்று விரும்புகிறார். அரசாங்கத்தின் வெளியுறவு மற்றும் பொருளாதாரக் கொள்கைத் தோல்விகளால் - குறிப்பாக, நாட்டின் வெளியுறவுக் கொள்கையையும் வர்த்தக நலன்களையும் அமெரிக்க-இஸ்ரேல் அச்சுக்கு அடமானம் வைத்ததால் - இந்தப் பொருளாதார நெருக்கடி மேலும் ஆழமடைந்துள்ளது. இப்போது அரசாங்கம் இந்த நெருக்கடியின் சுமையை சாதாரண மக்கள் மீது சுமத்தும் வேலையில் மும்முரமாக உள்ளது. அறிவிக்கப்படாத பொருளாதார முடக்கமும் அப்பட்டமான ஜனநாயக சீர்குலைவும் மக்களின் தேர்தல் உரிமைகளை மறுக்கும் போக்கும் ஒன்றிணைந்து பாசிச அச்சுறுத்தலின் புதிய மட்டத்தை குறிக்கின்றன. இடதுசாரி, முற்போக்கு, பாசிச எதிர்ப்பு சக்திகள், இந்தத் தீவிரமான தாக்குதலை புதுப்பிக்கப்பட்ட ஆற்றலுடனும் உறுதியுடனும் ஒற்றுமையுடனும் எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

**தமிழாக்கம்: விஜி**

## ஆசிரியர் பணி நியமனக் கோரிக்கை: பாட்னாவில் தேர்வர்கள் மீது பாஜக அரசின் போலீஸார் தடியடி

பீகார் மாநில அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள 46,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான நான்காம் கட்ட ஆசிரியர் பணிக்கான தேர்வு (TRE 4.0) குறித்த அறிவிப்பை உடனடியாக வெளியிடக் கோரி பாட்னாவில் கடந்த சில தினங்களாக ஆசிரியர் தகுதித் தேர்வர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேதிகளில் தேர்வு அறிவிப்பு வெளியாகாததால் ஆத்திரமடைந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள், பெண்கள் பாட்னா கல்லூரி வளாகத்திலிருந்து பீகார் பொதுப்பணி ஆணைய அலுவலகத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். இந்தப் பேரணியைத் தடுத்த காவல்துறைக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே தக் பங்களா சந்திப்பு பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் தடுப்புகளை மீறி முன்னேற முயன்றதைத் தொடர்ந்து, அவர்களைக் கலைக்க காவல்துறை தடியடி நடத்தியதில் பெண்கள் உட்பட ஏராளமானோர் காயமடைந்தனர். சாலையில் தப்பியோடிய மாணவர்களைக் காவலர்கள் விரட்டி சென்று தாக்கிய காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகிப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வன்முறை தொடர்பாக மாணவர் அமைப்பின் முக்கியத் தலைவர்கள் உட்படப் பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கானோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எதிராகக் குரல் எழுப்பிய இளைஞர்கள் மீதான இந்த ஒடுக்குமுறைக்கு அரசியல் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியிலிருந்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.பீகார் ஆசிரியர் தேர்வு .தேர்வு எழுதி காத்திருப்பவர்கள் 2,60,000. முடிவு அறிவிப்பை மீண்டும் மீண்டும் தள்ளி வைத்து வருகிறது பீகார் பாசிச பாஜக அரசு. போராட்டத்தில் திரண்ட வர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் மீது வழக்கு. தலைவர்கள் சிறையில். மே 10 அன்று இதைக் கண்டித்து இகக(மாலெ), மாணவர் கழகம், இளைஞர் கழகம் பீகார் முழுவதும் முற்றுகை, போராட்டம் நடத்தினர்.




# வங்காளத்தில் பாசிச ஆக்கிரமிப்பும் இடதுசாரிகளின் எதிர்ப்புப் போராட்ட உறுதியும்

**அபிஜித் மஜும்தார்**

மேற்கு வங்காளத்தில் பாஜக இறுதியில் ஆட்சியை கைப்பற்றியது சுதந்திரமான மற்றும் நியாயமான ஜனநாயகத் தேர்தல் மூலம் அல்ல; மாறாக, முழு தேர்தல் செயல்முறையையும் திட்டமிட்டு, முறையாகச் சீர்குலைத்ததன் மூலமாகவே அது நடந்தது. தேர்தல் ஆணையம் ஆளும் ஆட்சியின் கீழ்ப்படிதலான கருவியாக மாற்றப்பட்டு, ஜனநாயக உரிமைகள் மற்றும் அரசியல் சட்ட நெறிமுறைகளுக்கு எதிரான முன்னெப்போதும் இல்லாத தாக்குதலுக்கு துணைநின்றது.

நான்கு மாதங்கள் நீடித்த "Special Intensive Revision" (SIR) நடவடிக்கையின் முடிவில் சுமார் 91 லட்சம் வாக்காளர்கள் வாக்குரிமை இழக்கச் செய்யப்பட்டனர். இதேவேளை, 2 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மத்திய துணை ராணுவப் படையினர் மாநிலம் முழுவதும் குவிக்கப்பட்டனர். அது ஒரு பாராளுமன்ற ஜனநாயகத் தேர்தலைவிட ராணுவ ஆக்கிரமிப்பை நினைவூட்டும் சூழலை உருவாக்கியது. குண்டு தாங்கும் போர்வாகனங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் அணிவகுத்துச் சென்றன. பிரதான ஊடகங்களின் பெரும்பகுதி இந்த அதிகாரவாத ஆக்கிரமிப்புக்கு மக்களின் ஒப்புதலை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டது. வாக்கு எண்ணும் மையங்களில் மிரட்டல், வெளிப்படைத்தன்மையை திட்டமிட்டு சீர்குலைத்தல் போன்ற நிகழ்வுகள் தேர்தல் முறையே பாஜகவுக்குச் சாதகமாக மாற்றியமைக்கப்பட்டிருந்ததை வெளிப்படுத்தின. இவை அனைத்தும் மம்தா பானர்ஜி ஆட்சிக்கெதிரான உண்மையான அதிருப்தி நிலவிய சூழலில் நடந்தன; அந்த அதிருப்தியை பாஜக தந்திரமாகப் பயன்படுத்தி தனது அதிகாரவாத திட்டத்தை திணித்தது.

ஆட்சியைப் பிடித்தவுடன், பாஜக-ஆர்எஸ்எஸ் கூட்டணி திரிபுரா மாதிரியைப் பின்பற்றி அச்சுறுத்தல் மற்றும் ஆதிக்க அரசியலை ஒருங்கிணைந்த முறையில் தொடங்கியது. லெனின் மற்றும் சிதோ-கான்ஹு (பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திற்கு, ஜமீன்தாரி முறைக்கு எதிராக போராடிய புகழ்வாய்ந்த பழங்குடியின தலைவர்கள்) சிலைகள் சேதப்படுத்தப்பட்டு அவமதிக்கப்பட்டன. சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலாக "புல்டோசர் பேரணிகள்" நடத்தப்பட்டன; முஸ்லிம்கள் நடத்தும் உணவகங்கள் இடிக்கப்பட்டன; ஏழைகள் வாழும் குடிசைப்பகுதிகள் குறிவைக்கப்பட்டன. பயமும் துன்புறுத்தலும் நிரம்பிய சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

இந்த வெளிப்படையான அடக்கு முறையுடன் தீவிர சிந்தனைத் தாக்குதலும் முன்னெடுக்கப்பட்டது. வங்காள மறுமலர்ச்சியின் மகத்தான ஆளுமைகள் — சுவாமி விவேகானந்தர், பங்கிம் சந்திர சட்டோபாத்யாய், ரவீந்திரநாத் தாகூர், ராஜா ராம்மோகன் ராய் உள்ளிட்டோரின் — உலகமயமான, மனிதநேய, மதச்சார்பின்மை மரபுகளைப் பறித்து, அவற்றை குறுகிய பெரும்பான்மைவாதக் கட்டமைப்புக்குள் அடக்க முயன்றது சங்க் பரிவார். அதேவேளை, வங்காளப் பிரிவினையின் முக்கிய வடிவமைப்பாளர்களில் ஒருவரும் 1951ல் ஜனசங்கத்தை நிறுவியவருமான ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் சமுதாயப் பிளவைத் தூண்டும் அரசியலை வெளிப்படையாகப்

புகழ்ந்து, மத அடிப்படையிலான பிளவை நியாயப்படுத்தியது.

இந்த தீவிரமடைந்த ஃபாசிசத் தாக்குதலின் மத்தியில், வங்காளத்தின் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் சரணடையாமல் எதிர்த்து நிற்கத் தீர்மானித்தன. மிரட்டல்கள், வன்முறைகள், சேதப்படுத்தல்கள் ஆகியவற்றைக் கடந்து, CPI(ML) லிபரேஷன் கட்சியின் மேற்கு வங்க மாநிலக் குழு, அனைத்து இடதுசாரி கட்சிகள், ஜனநாயக அமைப்புகள் மற்றும் மனசாட்சியுள்ள குடிமக்களை ஒன்றிணைந்து எதிர்ப்பில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்தது.

அந்த அழைப்பை ஏற்று, மே 7ஆம் தேதி கொல்கத்தாவிலும் பல மாவட்டங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன. கொல்கத்தாவில் CPI(ML) லிபரேஷன், SUCI(C) மற்றும் பல ஜனநாயக சமூக செயற்பாட்டாளர்கள் தர்மதலாவில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க லெனின் சிலை முன்பு திரண்டனர். அந்தச் சிலையே காவி சக்திகளின் குறிவைக்கப்பட்ட சின்னமாக இருந்தது. அந்தக் கூட்டம் மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் இடதுசாரி ஒற்றுமையின் வலுவான வெளிப்பாடாக மாறியது.

இந்தப் போராட்டக் கூட்டத்தில் தோழர் தீபங்கர் பட்டாசார்யா, SUCI(C) மாநிலச் செயலாளர் தோழர் சந்திதாஸ் பட்டாசார்யா, பத்திரிகையாளர் அர்கா பதூரி, கலாச்சார செயற்பாட்டாளர் ஜோய்ராஜ் பட்டாசார்யா, CPI(ML) ரெட் ஸ்டார் இயக்கத்தின் தோழர் சங்கர் உள்ளிட்ட பலர் உரையாற்றினர். அவர்கள் வங்காளத்தின் அதிகாரவாத ஆக்கிரமிப்பைக் கண்டித்து, ஃபாசிசம் மற்றும் மதவெறிக்கு எதிரான பரந்த ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென அழைப்பு விடுத்தனர்.

அடுத்த நாள், அதாவது மே 8ஆம் தேதி, இடதுமுன்னணி கட்சிகளும் CPI(ML) அமைப்பும் இணைந்து மிகப்பெரிய பேரணியை நடத்தின. காவி வன்முறைக்கு எதிராகவும், புல்டோசர் படையினரால் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்ட ஏழை சிறுபான்மை வணிகர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமெனவும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மே 9ஆம் தேதி — காவி அரசு பதவியேற்ற நாளில் — இந்த இயக்கம் மேலும் வேகமடைந்தது. 1905ஆம் ஆண்டு லார்ட் கர்சன் வங்காளத்தை மத அடிப்படையில் பிரிக்க முயன்றபோது, அதற்கு எதிராக ரவீந்திரநாத் தாகூர் தலைமையில் நடைபெற்ற வரலாற்றுப் பேரணியை நினைவுகூரும் வகையில், பாக்பஜாரிலிருந்து நகோடா மசூதி வரை குடிமக்கள் பேரணி நடத்தப்பட்டது. அந்த வரலாற்று மரபை மீட்டெடுத்த இந்தப் பேரணி, இந்து-முஸ்லிம் ஒற்றுமை, சமூக நல்லிணக்கம் மற்றும் மத அடிப்படையிலான பிளவுக்கு எதிரான எதிர்ப்பை வலியுறுத்தியது. அந்நேரத்தில் பாஜக-ஆர்எஸ்எஸ் அமைப்புகள் சிறுபான்மையினரை தொடர்ந்து குறிவைத்து, வங்காளத்தின் கலப்பு பண்பாட்டை சிதைக்க முயன்று கொண்டிருந்தன.

புதிய ஆட்சி, அதிகாரவாதத்தின் இயல்பான மொழியான அடக்குமுறையால் பதிலளித்தது. அந்தப் பேரணி பாக்பஜாரிலேயே காவல்துறையால் தடுக்கப்பட்டது. இருந்தாலும், பங்கேற்பாளர்கள் தளரவில்லை. எதிர்ப்புப் பாடல்கள் தெருக்களை நிரப்பின; பொதுக்கூட்ட உரைகள் தைரியமாகத் தொடர்ந்தன; அரசின் மிரட்டலுக்கு முன் எதிர்ப்பின் மனஉறுதி தலைகுனிய மறுத்தது.

இந்தப் போராட்டங்கள் வங்காள மக்களிடையே பரவலான எதிரொலியை ஏற்படுத்தின. ஃபாசிச அரசியலின் எழுச்சி ஏற்படுத்தும் ஆபத்தை உணர்ந்த மனசாட்சியுள்ள குடிமக்கள், கலாச்சார செயற்பாட்டாளர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பல ஜனநாயக சக்திகளின் ஆதரவைப் பெற்றன. பல மாவட்டத் தலைமையகங்களிலும் ஒற்றுமைப் பேரணிகள் மற்றும் போராட்டங்கள் நடைபெற்றன. இது மதவெறி சார்ந்த அதிகாரவாதத்துக்கும், நிறுவன ஆதரவு பெற்ற ஃபாசிசத்துக்கும் எதிரான போராட்டம் இப்போதுதான் தொடங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தியது.

இன்றைய வங்காளப் போராட்டம் வெறும் தேர்தல் போட்டி அல்ல. அது ஜனநாயகத்தை அதிகாரவாதத்திலிருந்து காப்பாற்றும் போராட்டம்; பல்வகைமைச் சமூகத்தை மதவெறியிலிருந்து பாதுகாக்கும் போராட்டம்; வங்காளத்தின் விடுதலை மரபுகளை எதிர்வினை சக்திகளின் சுயநல அரசியலிலிருந்து மீட்டெடுக்கும் போராட்டம். வங்காளத்தின் தெருக்களில் எழுந்துள்ள இந்த எதிர்ப்பு, அந்த மாநிலத்தின் நீண்டகால காலனித்துவ எதிர்ப்பு வரலாறு, சமூகச் சீர்திருத்தப் பாரம்பரியம் மற்றும் இடதுசாரி இயக்கங்களின் சக்தியிலிருந்து ஊக்கம் பெறும் பரந்த ஜனநாயக எதிர்ப்புப் போராட்டத்தின் தொடக்கமாகும்.






# கண்ணியமான வேலை, ஊதியம், சமூகப் பாதுகாப்பு : தலைநகர் மண்டல தொழிலாளர்களின் ஆவேசப் போராட்டம்

ஈரான் மீது அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுப் படை நடத்தி வரும் போரின் தாக்கத்தை உலகமே உணர்ந்து வருகிறது. இந்தப் போர் மனித குலத்துக்கு எதிரானது. யுத்தம் என்றால் எப்போதும் பாதிப்புக்குள்ளாவது உழைக்கும் மக்களே. அதனால் தான், "கெட்டப் போரிடும் உலகினை வேரோடு சாய்ப்போம்" என உழைக்கும் மக்கள் முழங்கி வருகின்றனர்.

தேசிய தலைநகர் மண்டலம் என்று அழைக்கப்படுகிற டெல்லி, குருகிராம், மானேசர், நோய்டா தொழிற்சாலைப் பகுதிகளில் கடந்த பிப்ரவரி முதலே தொழிலாளர்கள் போராட்டக் கொடியை உயர்த்தத் துவங்கினர். ஏப்ரல் மாதத்தில் பல்லாயிரக்கணக்கானோர் வீதிக்கு வந்தனர். இந்த லட்சோப லட்சம் உழைக்கும் மக்களின் வாழ்நிலை பொதுச் சமூக வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. ஊடக கவனமும் பெற்றுள்ளது. ஒன்றிய மோடி அரசும், உத்தரப்பிரதேசம், ஹரியானாவில் ஆட்சியில் இருக்கும் இரட்டை எஞ்சின் பாஜக அரசாங்கங்களும் பற்றி எரியும் போராட்டங்களுக்கு பின்னுள்ள தொழிலாளர்களின் அவல நிலையை தீர்க்க முயற்சிப்பதற்கு மாறாக, அவதூறு பிரச்சாரத்தில் ஈடுபடுவதோடு காவல்துறை கொண்டு போராட்டங்களை ஒடுக்கியும் வருகிறது.

போராட்டங்களை தொழிலாளர் பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு மாறாக, அவற்றை சட்ட ஒழுங்கு பிரச்சனையாக சித்தரித்து, போராட்டங்களுக்குப் பின்னால் 'தேச விரோதிகள்' இருக்கிறார்கள், 'அர்ப்பன் நக்சல்கள்' இருக்கிறார்கள் என்று சொல்லி திசை திருப்புவதோடு போராட்ட முன்னணிகளையும் ஆதரவாகச் செயல்படுபவர்களையும் மட்டு மல்ல, மாணவர்கள், இளைஞர்கள், வழிப்போக்கர்கள் என பலரையும் கைது செய்து காவல்துறை சிறையில் அடைத்துள்ளது.

அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்க (AILAJ) வழக்கறிஞர்கள் முயற்சி செய்து முதல் தகவல் அறிக்கையை பெற்றிருக்கிறார்கள். அதில் போராட்டக்காரர்கள், பிணையில் வெளிவந்து விடக்கூடாது என்பதற்காக கொலை முயற்சி, கூட்டாக சேர்ந்தோ, தனித்தனியாகவோ அரசு அதிகாரிகளை செயல்பட விடாமல் தடுத்தது, வன்முறையில் ஈடுபட்டது என பல பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் எந்த தொழிற்சங்கத்திலும் உறுப்பினர்களாக இல்லை. இதுவரை எந்தப் போராட்டத்திலும் பங்கு பெற்றதும் இல்லை. பட்டினி ஊதியம் பெற்று, முற்றிலும் பணியிடத்தில் பாதுகாப்பற்ற நிலையில், எவ்வித சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் இல்லாமல், தொழிற்சங்கமாகவே அமைப்பாகாமல் வாழ்ந்து வரும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆவர். பெரும்பாலும் பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இந்தச் சூழலில்தான் அவர்கள் பயன்படுத்தும் வெளிச்சந்தை எரிவாயு சிலிண்டர் விலை பன்மடங்கு உயர்ந்தது. கொரோனா காலத்தில் தங்கள் சொந்த கிராமங்களுக்கு அணி அணியாக சென்றது போல மீண்டும் செல்ல வேண்டிய சூழல் உருவானது.

பாஜக ஆளும் மாநில அரசாங்கங்கள் 2014-

2015க்கு பிறகு கடந்த 10 ஆண்டுகளாக குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தவே இல்லை. இவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக, நிரந்தரமற்ற தொழிலாளர்களாகவே காலகாலமாக பணிபுரிகின்றனர். இவர்களின் மாத சம்பளம் தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக்கு ரூபாய் 11,000, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ரூபாய் 13,000ஐ தாண்டவில்லை. ஹரியானா அரசாங்கம் போராட்டத்தைத் தணிக்க 35% ஊதிய உயர்வு வழங்கியது. உத்தரபிரதேச அரசாங்கம் 21% ஊதிய உயர்வு என அறிவித்தது. முதலாளிகள் அதை வழங்குவதாக ஒப்புக்கொண்டனர். இத்தனை ஆண்டு எவ்வளவு பெரிய ஊதிய திருட்டு சுரண்டல் நடந்திருக்கிறது என்று பாருங்கள்.

இந்த ஊதிய உயர்வு அறிவிப்புகளுக்குப் பின்னரும் டெல்லி தொழிலாளர்கள் ஊதியத்தை விட அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் குறைவாகவே இருந்தது. மூன்று மாநில தொழிற்பேட்டைகளும் அருகருகே இருக்கும்போது ஊதிய முரண்பாடு தொழிலாளர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. ஒரே நேரத்தில் வீதிகளில் தொழிலாளர்கள் அணி திரள்வதற்கு சமூக ஊடகப் பிரச்சாரம் முக்கிய பங்காற்றியுள்ளது. ஒரு சாதாரண பொறியாளர் தொழிலாளர் மீது அக்கறை கொண்டு வெளியிட்ட பதிவுதான் அத்தனை பிரச்சனைகளுக்கும் காரணம் என்று சொல்லி அவரை பின்தொடர்ந்து திருச்சி ரயில் நிலையத்தில் வைத்து உத்தரப்பிரதேச காவல்துறையினர் கைது செய்துள்ளனர். போராடும் தொழிலாளர்களைச் சந்திக்க மையத் தொழிற்சங்க தலைவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கௌதம் புத் நகரில் ஏ ஐ சி சி டி யு மாவட்டத் தலைவர் அமர்சிங் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அதுபோல, பல தலைவர்களும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். சமூகச் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் மண்டலத்தில் தொடங்கிய போராட்டத்தின் வீச்சு, உத்தரகாண்ட் மாநிலம் வரை பரவியது. வீட்டு வேலை செய்யும் பெண்களும் கண்ணியமான ஊதியம் வேண்டும் என வீதிகளில் இறங்கினர். குரு கிராம், மானேசர் தொழில் பகுதிகளில் உள்ள ஹோண்டா, முஞ்சல் ஆட்டோ, ரிசா டெக்ஸ்டைல்ஸ், சத்யம் ஆட்டோ, பிரிக்கால் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி ஆலை வாயில்களில் முதலில் அணி திரண்டனர். கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்காததால் அவர்கள் சாலைகளுக்கு வந்தனர். அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது காவல்துறை அடாவடியாக தடியடி, கண்ணீர் புகை வீச்சு நடத்தி பலரையும் கைது செய்தது. இந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அடுத்தடுத்த நாட்களில் இரண்டு மடங்காக, மூன்று மடங்காக தொழிலாளர்கள் வீதிகளில் அணி திரண்டனர்.

இப்பகுதியில் உள்ள பல நிறுவனங்களின் நிதி நிலையை ஆராயும் போது, 2021 இல் இருந்து 2025 காலகட்டத்தில் அவற்றின் வருவாய் இரண்டு மடங்கிலிருந்து ஆறு மடங்கு வரையும், லாபம் இரண்டு மடங்கிலிருந்து பத்து மடங்கு வரையும் கூட உயர்ந்திருக்கின்றன. ஆனால், தொழிலாளர்களுக்கு ரூபாய் 8000 முதல் 13,000 வரையே ஊதியம் வழங்கப்படுகிறது. நிச்சயமாக தொழிலாளர்களுக்கு சொற்ப ஊதியம் வழங்கி விட்டு, அவர்கள் உழைப்பினால் வந்த செல்வத்தைக் கொண்டு இந்த நிறுவனங்கள் மிகப்பெரிய விரிவாக்கம் மேற்கொண்டுள்ளன என்பது தெளிவு.

இரட்டை எஞ்சின் அரசாங்கங்களும், முதலாளிகளும் சேர்ந்து தொழிலாளர்களுக்கு உயிர் பிழைத்திருப்பதற்கான ஊதியத்தை மட்டுமே வழங்கி வருகின்றனர். சராசரியாக 12 மணி நேர வேலை, மிகை நேரப் பணிக்கு இரட்டிப்பு சம்பளம் வழங்குவதில்லை, வார விடுமுறை கிடையாது, சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் பற்றி தொழிலாளர்கள் அறிந்திருக்கவில்லை, பெண் தொழிலாளர்கள் வேலை செய்யும் ஆலைகளில் உள்ளக புகார் கமிட்டிகள் கிடையாது. இந்தப் பின்னணியில் தான் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் ஏற்கனவே அரசிதழில் வெளியிட்டுள்ள நிலையில், அதற்கான விதிகள் கடந்த மே 8 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் வருங்கால நிலைமைகள் தொழிலாளர்களுக்கு இன்னும் மோசமானதாக இருக்கும். அலை அலையாக போராட்டங்கள் எழுவதை தவிர்க்க முடியாது, தடுக்கவும் முடியாது.

மே 12 அகில இந்திய கோரிக்கை நாளாக கடைபிடிக்க 10 மைய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்திருந்தது. தொழிலாளர் விரோத தொகுப்புச் சட்டங்கள் திரும்பப் பெறப்படும் வரை காத்திரமான போராட்டங்களுக்கு தொழிலாளி வர்க்கம் தயாராக வேண்டும்.

போராடிக் கொண்டிருக்கும் நிரந்தரமற்ற ஒப்பந்த தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.42,000 வழங்கு!

மிகை நேர பணிக்கு இரட்டிப்பு சம்பளம் வழங்கு!

வார விடுமுறையை, பெண் தொழிலாளர்களுக்கான உள்ளக புகார் குழுக்கள் அமைப்பதை உறுதி செய்!

பணியிடப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு திட்டங்களை உறுதி செய்!


புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மானிய விலையில் எரிவாயு சிலிண்டர் வழங்கு!

ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய். சம வேலைக்கு சம ஊதியம் வழங்கு!

சிறையில் அடைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை, சமூக செயற்பாட்டாளர்களை, கலைஞர்களை உடனடியாக விடுதலை செய்!

**– தேசிகன்**

# கலகமும் கலந்துரையாடலும்



2026 ஏப்ரல் 28 அன்று, "உமர் காலித் மற்றும் அவரது உலகம்: ஒரு தொகுப்பு" (Umar Khalid and his World: An Anthology) என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இது பியுசிஎல்-கே (PUCL-K) மற்றும் பகுத்வ கர்நாடகா (Bahutva Karnataka) ஆகியவற்றுடன் இணைந்து அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ) அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் புத்தகத்தை அனிர்பன் பட்டாச்சார்யா, பானோஜ்யோத்ஸ்னா லஹிரி மற்றும் ஷுத்தாப்ரதா சென்குப்தா ஆகியோர் தொகுத்துள்ளனர். அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் கிளிப்டன் டி ரொசாரியோ தொடக்க உரையாற்றினார்.

இந்தக் குழு விவாதத்தில் புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் காந்தியவாதியுமான ராமச்சந்திர குஹா, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் ஜானகி நாயர், திரைப்பட நடிகரும் அரசியல் செயல்பாட்டாளருமான பிரகாஷ் ராஜ் ஆகியோர் பங்கேற்றனர். எழுத்தாளரும் பியுசிஎல் தேசிய செயலாளருமான அரவிந்த் நரேன் விவாதத்தை ஒருங்கிணைத்தார்.

இந்த நிகழ்வு ஒரு வழக்கமான நிகழ்வாகவே அமைந்திருக்க வேண்டும். ஆனால், பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் பி.சி. மோகன் தலைமையில் நடைபெற்ற போராட்டங்களின் காரணமாக, இது ஒரு சர்ச்சைக்குரிய நிகழ்வாக மாறியது. இப்போராட்டங்களைக் கருத்தில் கொண்டு, நிகழ்விடத்தில் பெருமளவிலான காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டக்காரர்கள் நிகழ்விடத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். பதற்றமான சூழல் நிலவியபோதிலும், நிகழ்வில் கலந்துகொள்ள ஏராளமான மக்கள் திரண்டு வந்தனர்.

டிசம்பர் 2019-இல் நடைபெற்ற சிஏஏ (CAA) எதிர்ப்புப் போராட்டங்களின் போது, டெல்லிக்கு அடுத்தபடியாக வெகுமக்கள் போராட்டங்களின் மையமாக பெங்களூரு தேசிய கவனத்தைப் பெற்றது. அப்போதைய போராட்டங்களில் முன்னின்ற பெரும்பாலான செயல்பாட்டாளர்கள், பாசிச ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் இளைஞர் அடையாளங்களில் ஒருவரான உமருக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிக்க அந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.. "நாமனைவரும் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் அனுபவிப்பதை உறுதி செய்வதற்காகவே உமர் காலித் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்" என்று கூறி பிரகாஷ் ராஜ் விவாதத்தை நிறைவு செய்தார்.

– பிஆர் எஸ் மணி

**தங்கம் வாங்காதீர்கள், பெட்ரோல், டீசலை குறையுங்கள், வீட்டிலிருந்தே வேலை செய்யுங்கள்!**

–நாட்டு மக்களுக்கு மோடி அறிவுரை

**ஆமாம் ஆமாம். ரூ. 8000 கோடி விமானப் பயணத்தை எப்போது நிறுத்துவீர்கள் ஜீ?**

–இந்தியன் தாத்தா

திமுக வை காங்கிரஸ் முதுகில் குத்துவிட்டதாக பேசும் மோடி ஜி அவர்களே!
உங்கள் நீட் தேர்வு லட்சணத்தால் 23 லட்சம் பேர்களின் வாழ்வு குத்திக் கிழிக்கப்பட்டுள்ளதை பேசமாட்டீங்கிறீங்களே?

**இது குதிரை பேர அரசு இல்ல, குதிரை வேக அரசு!**

–முதலமைச்சர் விஜய்

**முதலமைச்சர் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மைதான்!**

– ஜோஸ்யர் ரிக்கி பண்டிட்

# ஒன்றிய மோடி அரசே!
# தொழிலாளர் மீது; மக்கள் மீது மேலும் சுமையைத் திணிக்காதே!

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு எதிராக 2026 மே 18 அன்று எல்பிஎஃப் , ஹெச்எம்எஸ் , ஏஐடியுசி , சிஐடியு , ஐஎன்டியுசி, ஏஐயுடியுசி, ஏஐசிசிடியு , யுடியுசி, டியுசிசி, டபிள்யுபிடியுசி , எம்எல்எஃப் , எல்எல்எஃப் ஆகிய தமிழ்நாட்டின் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூவல் விடப்பட்டது.

இன்று இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திக்கொள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் காரணமாக பெட்ரோல் லிட்டருக்கு ரூ.3.10, டீசல் லிட்டருக்கு ரூ.3.08 என விலை உயர்த்தப்பட்டுள்ளது. தொடர்ந்து சிஎன்ஜி எரிவாயு விலையும் கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடாவடி நடவடிக்கைகள், ஈரான் மீது திணிக்கப்பட்ட போர் காரணமாக உலகளவில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. அதன் தாக்கம் இந்தியாவிலும் ஏற்பட்டுள்ளது. இந்திய அரசு தற்காப்பு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ள முன்வரவில்லை. இந்த நிலையில், ஏற்கனவே கடந்த ஜனவரி மாதத்திலிருந்து வர்த்தக எரிவாயு சிலிண்டர் விலை ரூ.1,518 வரை உயர்ந்துள்ளது. அதோடு கடுமையான எரிவாயு தட்டுப்பாடும் நிலவுகிறது.

மற்றொரு புறம், பாஜக ஆளும் குஜராத், உத்தரப் பிரதேசம், அரியானா, ராஜஸ்தான், டெல்லி, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பை சந்தித்துள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் புலம்பெயர் தொழிலாளர்கள். வேலைக்காக சென்ற ஊர்களில் வாழ முடியாத நிலை ஏற்பட்டதால் சொந்த ஊர்களுக்கு திரும்ப நேரிட்டது. போதுமான ரயில் மற்றும் பொது போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் 36 மணி நேரம், 40 மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருந்து காவல்துறையின் தடியடி உள்ளிட்ட அடக்குமுறைகளையும் அவர்கள் எதிர்கொண்டனர்.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்த ஒன்றிய அரசு, தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளை அமல்படுத்தி, தொழிலாளர்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்கும் என பரப்புரை செய்தது. ஆனால் கடந்த பத்தாண்டுகளில் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. எரிவாயு தட்டுப்பாடு, விலை உயர்வு, வேலை பாதுகாப்பின்மை ஆகியவை தொழிலாளர்கள் மற்றும் மக்களின் வாழ்க்கையை கடுமையாக பாதித்துள்ளன.

இதன் காரணமாக கிரேட்டர் நொய்டா, குர்கான் உள்ளிட்ட வட, மத்திய மாநிலங்களில் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். அவர்கள் கோரும் குறைந்தபட்ச ஊதியத்தைக் கூட வழங்காமல் காவல்துறை மூலம் கொடூரமான அடக்குமுறைகள் ஏவப்பட்டுள்ளன.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி மக்களுக்கு “சிக்கன நடவடிக்கைகள்” குறித்து அறிவுரை வழங்கியுள்ளார். மக்கள் பொது போக்குவரத்து, மின்சார வாகனங்களை பயன்படுத்த வேண்டும்; நிறுவனங்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்க வேண்டும்; விவசாயிகள் ரசாயன உரங்களை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்; தேவையற்ற வெளிநாட்டு பயணங்களை தவிர்க்க வேண்டும் என மக்கள் மீதே சுமையை மாற்றும் வகையில் பேசியுள்ளார்.

இத்தகைய சூழலில் தற்போது மேலும் ஒரு பேரிடியாக பெட்ரோல், டீசல் விலை உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக போக்குவரத்து கட்டணங்கள் உயரும். விலைவாசி மேலும் அதிகரிக்கும். ஏற்கனவே கடுமையான விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இன்னும் மோசமாக பாதிக்கப்படுவார்கள்.

நிரந்தரமற்ற வேலை, குறைந்த சம்பளம், சமூக பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களால் நாடு முழுவதும் தொழிலாளர்கள் கடுமையான நெருக்கடியில் உள்ளனர். விவசாயிகளுக்கும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத நிலை தொடர்கிறது. இந்த நிலையில் எரிபொருள் விலை உயர்வு என்பது தொழிலாளர்கள், விவசாயிகள், சாமானிய மக்களின் தலையில் இடி விழுவது போன்றதாகும்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்திருந்த காலங்களில் கூட மக்களுக்கு அதன் பயனை வழங்காமல் கார்ப்பரேட் எண்ணெய் நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்ட ஒன்றிய மோடி அரசு அனுமதித்தது. ஆனால் தற்போது சர்வதேச சந்தை விலையை காரணம் காட்டி மீண்டும் மக்கள் மீது சுமையை திணிப்பது எந்த வகையிலும் நியாயமல்ல.

ஒன்றிய அரசின் ஆதரவால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் லாபம் ஈட்டி நாட்டின் செல்வத்தை குவித்துக் கொண்டிருக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபத்தை பாதுகாக்க மக்கள் மீது சுமை திணிக்கப்படுவது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

பெட்ரோல், டீசல், எரிவாயு விலை உயர்வை எதிர்த்து 2026 மே 18 அன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் தொழில் மையங்களிலும் ஏஐசிசிடியு அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.



# பாஜகவின் அசுர ஓட்டத்தைத் தடுக்க ‘இந்தியா’ கூட்டணி ஒன்றிணைய வேண்டும்:

## இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் வேண்டுகோள்

பீகார் மாநில சிபிஐ(எம்எல்) கட்சியின் 12-வது மாநில மாநாடு மே 15-17, 2026 தேதிகளில் நடைபெற்றது. அம் மாநாட்டில் பீகார் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி (பாஜக) பெரும் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதன் பின்னணியில், பீகாரைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் மே 16, 2026 ஒரே மேடையில் கூடியது முக்கியத்துவம் பெற்றது. தர்பங்காவின் லஹேரியாசராய் பகுதியில் உள்ள போலோ மைதானத்தில் 2026 மே 15 அன்று பேரணியுடன் தொடங்கியது.

“புல்டோசர் ராஜ்ஜியத்திற்கு எதிரான ஜனநாயகக் கேள்வி” என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய சிபிஐ(எம்எல்) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் , அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் சுதந்திரத்தை மீட்டெடுக்க நாட்டு மக்கள் புதியதொரு சுதந்திரப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். மேற்கு வங்கத்தில் பாஜகவின் தேர்தல் வெற்றி ஒரு பெரிய கருத்தியல் வெற்றியும் கூட பாஜகவின் ஆட்சியால் வரையறுக்கப்படும் ஒரு புதிய யுகத்தில் மக்கள் வாழ்ந்து வருவதாகவும், இங்கு ‘நல்லாட்சிக்கு’ (சுசாசன்) பதிலாக புல்டோசர்களை கண்மூடித்தனமாகப் பயன்படுத்துவது பற்றி பகிரங்கமாக விவாதிக்கப்படுகிறது என்று கூறினார். மேற்கு ஆசியப் போரைக் குறிப்பிட்ட அவர், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளையும் பணிய வைக்க மக்கள் காட்டிய சக்தி ஈரானில் தெளிவாகத் தெரிந்தது என்றார். அதற்கு நேர்மாறாக, இந்திய அரசு பின்பற்றும் வெளியுறவுக் கொள்கை இந்திய நாட்டின் பிம்பத்தை உலக அரங்கில் கெடுத்துள்ளது என்று குறிப்பிட்ட அவர், “தேசபக்தி என்ற பெயரில் பிரதமர் மோடி மக்களுக்கு விடுக்கும் கோரிக்கைகள், தற்போதைய நெருக்கடியின் சுமையை திசைதிருப்புவதற்கான ஒரு தந்திரமே ஆகும்; இந்த நெருக்கடிக்கு மோடி அரசே முழு பொறுப்பு” என்றார்.

அவர் மேலும் கூறுகையில், “நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியத்தைப் பெறப் போராடி வருகின்றனர். மாணவர்கள் நடத்திய இயக்கங்கள், குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு (சிஏஏ) எதிரான போராட்டங்கள் மற்றும் விவசாயிகள் இயக்கம் ஆகியவற்றை இந்த நாடு கண்டுள்ளது. ‘இந்தியா’ (INDIA) கூட்டணி இந்த இயக்கங்களின் மத்தியிலிருந்தே உருவானது. கூட்டுச் சக்திக்காக இந்த அனைத்து எதிர்ப்பு சக்திகளுடனும் நாம் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்.” என்றார்.

மாநாட்டின் பொது அமர்வில், சிபிஐ(எம்எல்) அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும் மாநாட்டிற்கான மத்தியக் குழுவின் பார்வையாளருமான தோழர் வீ.சங்கர், ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) பீகார் மாநிலத் தலைவர் மங்கனி லால் மண்டல் சிபிஐ மாநிலச் செயலாளர் தோழர் ராம்நரேஷ் பாண்டே, காங்கிரஸ் மேலவை உறுப்பினர் (MLC) மதன் மோகன் ஜா விகாஷீல் இன்சான் கட்சி (விஐபி) தலைவர் பால்கோவிந்த் பிந்த், காராகாட் தொகுதி சிபிஐ(எம்எல்) நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாராம் சிங் சிபிஐ(எம்எல்) கட்சியின் அரா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுதாமா பிரசாத் உள்ளிட்டோரும் உரையாற்றினர். மிதிலா மண்டலத்திற்கான சிபிஐ(எம்எல்) பொறுப்பாளர் தீரேந்திர ஜா பொது மாநாட்டு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

# மே நாள் உறுதியேற்பு நிகழ்ச்சிகள்






















MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17

# பாஜக அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கையைக் கண்டித்து




















Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, **11**th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**